هذا هو الإسلام ـ تاميلي

# இது தான் இஸ்லாம்

تعاوني الزلفي

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

136

هاتف: ٤٢٣٤٤٦٦ ٠١٦ . فاكس: ٤٢٣٤٤٧٧ ٠١٦

# هذا هو الإسلام

**أعده وترجمه إلــى اللغة التاميلية:**

## شعبة توعية الجاليات في الزلفي

**الطبعة الأولى: ١٤٢٦/٥ هـ.**

ح المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالبديعة، ١٤٢٨هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

شعبة توعية الجاليات بالزلفي

هذا هو الإسلام باللغة التاميلية / شعبة توعية الجاليات بالزلفي – الرياض ، ١٤٢٨هـ

٨٨ ص ؛ ١٢ X ١٧ سم

ردمك : ٩٧٨-٩٩٦٠-٥٨-٨٢٦-١

١– الإسلام – مبادئ عامة ٢– الشريعة الإسلامية

أ– العنوان

ديوي ٢١١ ١٤٢٨/٧٥٩٤

رقم الايـداع: ١٤٢٨/٧٥٩٤

ردمك: ٩٧٨-٩٩٦٠-٥٨-٨٢٦-١

الصف والإخراج: **شعبة توعية الجاليات في الزلفي**

# هذا هو الإسلام

# இதுதான் இஸ்லாம்

மனிதன் வாழுகின்ற இந்த பூமி, பரந்து விரிந்த அழகான இப்பிரபஞ்சம், இந்த வானம், அதில் மின்னுகின்ற லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் இவை அனைத்தும் சீரான ஒழுங்கமைப்புடன் செல்வதையும் இதோ இந்த பூமி, அதிலுள்ள மலைகள், பள்ளத் தாக்குகள், ஆறுகள், ஓடைகள், மரங்கள், விளை நிலங்கள், காற்று, நீர், கடல், திடல், இரவு, பகல் ஆகிய அனைத்தையும் மனிதன் சிந்தித்துப் பார்க்கின்ற பொழுது அவனுள் ஒரு வினா எழுவது நிச்சயம்.

அதாவது இவற்றையெல்லாம் படைத்தவன் யார்? வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தண்ணீரை வானி லிருந்து பொழியச் செய்தவன் யார்? அதன் மூலம் மரங்களையும் செடி கொடிகளையும் மலர்களையும் கனிகளையும் வெளிக்கொணர்பவன் யார்? அதன் மூலம் மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் தண்ணீர் புகட்டுபவன் யார்? அந்த நீரைத் தன்னுள் தேக்கி வைப்பதற்கு இப்பூமியைத் தயார்படுத்தியவன் யார்?

பொருட்களின் தேவைக்கேற்ப பொருத்தமான அளவுக்கு இப்பூமிக்கு ஈர்ப்பு சக்தியைக் கொடுத்தவன் யார்? அவ்வீர்ப்பு சக்தி கூடவும் செய்யாது. குறையவும் செய்யாது. கூடினால் அதில் நடமாடுவது சிரமமாகி

விடும். குறைந்தால் பொருட்கள் அனைத்தும் அதை விட்டும் பறக்கத் தொடங்கி விடும்!

மனிதனை எவ்வித முன்மாதிரியின்றிப் படைத்து, அழகிய உருவில் அவனை வடிவமைத்தது யார்? ஏன் மனிதன் தன்னை சிந்தித்துப் பார்த்தாலே பல நூதனங்களைக் காண முடியும். இதோ பலதரப்பட்ட உன் உடற்கூறுகளை சிந்தித்துப் பார்! அவை எத்துணை நுட்பமான முறையில் செயல்படுகின்றன! அவற்றின் செயற்பாடுகளைப் பற்றி நீ அறிந்திருப்பது மிகக் குறைவே! பிறகு எப்படி அவற்றை உன்னால் கட்டுப்படுத்த முடியும்?

இதோ நீ சுவாசிக்கும் இந்த காற்றை சிந்தித்துப் பார்! ஒரு கனப் பொழுதேனும் அது உன்னை விட்டும் நின்று விட்டால் உன்னுடைய உயிர் பிரிந்துவிடுமே! இந்த சுவாசக் காற்றைப் படைத்தவன் யார்?

இதோ நீ அருந்தும் நீர், நீ உண்ணும் உணவு, நீ நடமாடும் இந்த பூமி, நீ அண்ணாந்து பார்க்கும் இந்த வானம், உனக்கு ஒளி தரும் இந்தச் சூரியன், இந்த நிலா, இந்த நட்சத்திரங்கள் மற்றும் நீ காணும் ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பார்? அவையனைத்தையும் படைத்தது யார்?

அவன் தான் அல்லாஹ்! அந்த அல்லாஹ் தான் இவ்வுலகமனைத்தையும் படைத்தவன்! இவ்வுலகை நிர்வகிப்பவனும் அதிகாரம் செலுத்துபவனும் அவன் மட்டுமே. அவன் தான் உன்னுடைய இறைவன். அவனே

உன்னைப் படைத்து உனக்கு உணவளித்தான். உன்னை வாழ வைப்பவனும் உன்னை மரணிக்கச் செய்பவனும் அவனே! இவ்வுலகம் அனைத்தையும் 'இல்லாமை' யிலிருந்து அவன் படைத்ததுபோல அவனே உன்னையும் 'இல்லாமை' யிலிருந்து படைத்தான்!

இத்தனைக்குப் பிறகும் 'இந்த உலகம் முழுவதும் வீணாகவே படைக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் காலம் காலமாக இவ்வுலகில் பிறக்கின்றார்கள், வாழ்கின் றார்கள், பின்னர் மரணிக்கின்றார்கள். அத்துடன் எல்லாமே முடிந்து விடுகின்றன' என ஒரு புத்திசாலி எண்ண முடியுமா என்ன? அப்படியால் உண்மை நிலைதான் என்ன? எதற்காக மனிதர்களாகிய நாம் படைக்கப்பட்டுள்ளோம்?

## எதற்காக நாம் படைக்கப்பட்டுள்ளோம்?

அல்லாஹ் ஒருனை மட்டும் வணங்குவதற்காகவே அவன் நம்மைப் படைத்துள்ளான். மேலும் அவனை எப்படி வணங்குவது என்பதை விளக்குவதற்காகவே நமக்கு இறைத்தூதர்களை அனுப்பி வேதங்களையும் இறக்கியருளினான். யார் அவனை வணங்கி, அவனுக்கே அடிபணிந்து அவன் விலக்கியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்கின்றாரோ அவர் அவனது திருப்தியைப் பெற்றுக் கொள்வார். யார் அவனை வணங்குவதைப் புறக்கணித்து விட்டு அவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதை விட்டுவிடுகின்றாரோ அவர் அவனுடைய கோபத்திற்கும் தண்டனைக்கும் ஆளாகி விடுவார்.

இவ்வுலகை அல்லாஹ் செயற்களமாகவும் சோதனை கூடமாகவுமே ஆக்கியிருக்கின்றான். அதன் பிறகு மறுமை நாளில் அல்லாஹ் மனிதர்கள் அனைவரையும் விசாரணைக்காகவும் கூலி கொடுப்பதற்காகவும் மீண்டும் எழுப்புவான். அங்கே அல்லாஹ் சொர்க் கத்தைப் படைத்திருப்பான். அதில் எந்தக் கண்ணும் கண்டிராத எந்தக் காதும் கேட்டிராத எந்த மனிதரின் உள்ளத்திலும் உதித்திராத இன்பங்கள் இருக்கும். தன்னை நம்பி தன்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்த மு:மின்களுக்காக அதனை அல்லாஹ் படைத்துள்ளான்.

மேலும் அங்கு நரகத்தைப் படைத்திருப்பான். எந்த உள்ளத்திலும் உதித்திருக்காத விதவிதமான வேதனைகள் அதில் இருக்கும். எவர்கள் அல்லாஹ்வை நிராகரித்து விட்டு மற்றவைகளை வணங்கினார்களோ மேலும் இஸ்லாத்தை விடுத்து வேறு வழிகளைப் பின்பற்றினார்களோ அவர்களுக்காக அல்லாஹ் அதனை தயார்படுத்தியுள்ளான்.

## இஸ்லாம் என்றால் என்ன?

இஸ்லாம் என்பது மனிதர்களுக்காக அல்லாஹ் தேர்ந்தெடுத்த மார்க்கமாகும். அல்லாஹ்வை மட்டுமே வணங்கி, அவனுடைய தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுவதுதான் இஸ்லாம். இஸ்லாம் அல்லாத வேறு எந்த மார்க்கத்தையும் எவரிடமிருந்தும் அல்லாஹ் ஏற்றுக்கொள்வதில்லை. இந்த இஸ்லாமிய

மார்க்கம் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் உரியதல்ல. மாறாக மனித சமுதாயம் முழுவதுக்கும் உரியதாகும். அல்லாஹ் தன்னுடைய அடியார்களுக்கு பல்வேறு கட்டளைகளை விதித்துள்ளான். மேலும் சிலவற்றை அவர்களுக்கு விலக்கியுள்ளான். அவனுக்கு யார் கட்டுப்படுகிறாரோ அவர் வெற்றி பெறுவார், தப்பித்து விடுவார். அவனுக்கு மாறு செய்கிறவர் தோல்வி அடைவார், பெரும் இழப்புக்கு ஆளாவார்.

இஸ்லாம் ஒன்றும் புதிய மார்க்கமல்ல. மாறாக இந்த பூமியில் மனித வாழ்க்கை ஆரம்பித்ததிலிருந்து தனது அடியார்களுக்கு அல்லாஹ் தேர்ந்தெடுத்த மார்க்கம் ஆகும்.

## மனித வரலாறு

மனித இனத்தின் தந்தை ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைத்ததிலிருந்து மனித இனத்தின் வரலாறு துவங்குகிறது. ஆதமை அல்லாஹ் களிமண்ணிலிருந்து படைத்தான். பிறகு அவருள் தன்னுடைய உயிரை ஊதினான். அனைத்துப் பொருட்களின் பெயர்களையும் அவருக்குக் கற்றுக் கொடுத்தான். மேலும் அவருக்கு கூடுதல் கண்ணியத்தையும் மரியாதையையும் கொடுப்பதற்காக அவருக்கு சிரம்பணியும்படி வானவர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அனைவரும் ஆதமுக்கு சிரம்பணிந்தார்கள் இப்லீஸைத் தவிர. அவன் ஆதமின் மீது பொறாமை கொண்டு அக்கட்டளையை மறுத்தான். ஆணவம் கொண்டான். அதனால் அல்லாஹ் இப்லீஸை

வானத்திலிருந்து கீழே இறக்கினான். அவனை இழந்தவனாக, இறையருளை இழந்தவனாக அங்கிருந்து வெளியேற்றினான். மேலும் அல்லாஹ் இப்லீஸை சாபத்திற்கும் துர்ப்பாக்கியத்திற்கும் நரகத்திற்கும் உரியவனாக ஆக்கினான்.

இப்லீஸ் தனது இறைவனிடம் மறுமை நாள் வரை தனக்கு அவகாசம் அளிக்கும்படி வேண்டினான். அவ்வாறே அல்லாஹ்வும் அவனுக்கு அவகாசம் அளித்தான். அதன்படி இப்லீஸ் ஆதமின் வழித்தோன்றல்கள் (மனிதர்கள்) அனைவரையும் வழிகெடுக்கப்போவதாக சத்தியம் செய்தான்.

அதன் பிறகு அல்லாஹ் ஆதமிலிருந்து அவருடைய துணைவி ஹவ்வாவைப் படைத்தான்- ஆதம் அவளிடம் அமைதியும் அன்பும் பெற வேண்டும் என்பதற்காக. மேலும் அவ்விருவரும் சொர்க்கத்தில் தங்கும்படி கட்டளையிட்டான். அந்த சொர்க்கத்தில் எந்த மனிதனின் கற்பனைக்கும் எட்டாத அருட்பேருகள் உள்ளன.

மேலும் இப்லீஸ் அவ்விருவருக்கும் விரோதி ஆவான் என்பதையும் அல்லாஹ் தெரிவித்தான். பிறகு அல்லாஹ் அவர்களை சோதிப்பதற்காக சுவனத்தின் மரங்களில் ஒன்றை புசிக்கக் கூடாது எனத் தடுத்தான். ஆனால் இப்லீஸ் அவர்களைக் குழப்பினான். அம்மரத்திலிருந்து புசிப்பதை அவர்களுக்கு அழகாகக் காட்டினான். மேலும் இது விஷயத்தில், தான் அவர்களுக்கு நலமே

நாடுவதாக ஆணையிட்டுக் கூறினான். நீங்கள் இருவரும் இம்மரத்திலிருந்து புசித்தால் இந்த சொர்க்கத்தில் நிரந்தரமாகத் தங்கி வாழ்வீர்கள் என்று அவன் சொன்னான். இவ்வாறு தொடர்ந்து அவர்களிடம் கூறி இறுதியில் அவர்களை வழிகெடுத்தான். பிறகு அவர்கள் இருவரும் அம்மரத்திலிருந்து புசித்து தம் இறைவனின் கட்டளைக்கு மாறு செய்தனர்.

அதன் பிறகு அவ்விருவரும் தாங்கள் செய்தவற்றிற்கு மிகவும் வருந்தினார்கள். தங்கள் இறைவனிடம் மன்னிப்புக் கோரினார்கள். அல்லாஹ் அவ்விருவரையும் மன்னித்தான். ஆனாலும் அவர்களை சுவனத்திலிருந்து பூமிக்கு இறக்கினான். ஆதமும் அவரது மனைவியும் இப்புவியில் தங்கி வாழ்ந்தனர். அல்லாஹ் அவர்களுக்கு சந்ததிகளை வழங்கினான். அவர்கள் பல குலங்களாக வும் கோத்திரங்களாகவும் இன்று வரை பல்கிப் பெருகி வருகின்றனர்.

இப்லீசும் அவனுடைய சந்ததிகளும் ஆதமின் சந்ததியினருடன் தொடர்ந்து மோதிக் கொண்டே வருகின்றனர். காரணம் ஆதமின் சந்ததியினர் மறுமையில் நரகத்திற்குச் செல்ல வேண்டுமென்ற ஆவலில் இப்லீஸ் அவர்களை நேர்வழியில் செல்வதை விட்டும் நன்மை களைச் செய்வதை விட்டும் தடுத்து, தீமைகளை அவர்களுக்கு அழகாகக் காட்டி இறைவனின் திருப்பொருத்தத்தை விட்டும் அவர்களை தூரமாக்கிட வேண்டும் என்பதற்காக.

ஆனால் அல்லாஹ் மனிதர்களை வீணாக விட்டு விட வில்லை. மாறாக சத்தியத்தை அவர்களுக்கு போதிப்பதற்காகவும் அவர்களுக்கு எதில் வெற்றியும் விடுதலையும் இருக்கிறதோ அதன் பால் அவர்களுக்கு வழிகாட்டுவதற்காகவும் இறைத்தூதர்களை அனுப்பி வைத்தான்.

ஆதம் (அலை) மரணித்த பிறகு அவருடைய சந்ததியினர் பத்து நூற்றாண்டுகளாக ஒரே இறைவனையே வணங்கி வழிபட்டு வந்தனர். பிறகு அவர்களிடம் ஷிர்க்- இணை வைப்பு ஏற்பட்டு அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாத வர்களையும் வணங்கும் நிலை உருவானது. மக்கள் சிலைகளை வணங்கத் தொடங்கினர். உடனே அல்லாஹ் நூஹ் (அலை) அவர்களை முதன் முதலில் இறைத்தூதராக அனுப்பி வைத்தான். அவர் அல்லாஹ்வை வணங்கும்படியும் சிலைவணக்கத்தை விட்டு விடுமாறும் மக்களை அழைத்தார்.

அதன் பிறகு இஸ்லாத்தின் பக்கம்- அதாவது அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும். அவனை விடுத்து மற்றவைகளை வணங்குவதைக் கைவிட வேண்டும் என்னும் கொள்கையின் பக்கம்- அழைப் பதற்காக தொடர்ந்து நபிமார்கள் அனுப்பப்படலாயினர்.

அந்த வரிசையில் இப்ராஹீம் எனும் இறைத்தூதர் வந்தார். அவர் தமது சமுதாயத்தவர்களை சிலை வணக்கத்தை விட்டு விட்டு அல்லாஹ் ஒருவனையே வணங்குமாறு அழைத்தார். அவருக்குப் பின் நபித்துவம்

அவருடைய மக்களான இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோருக்குக் கிடைத்தது. பின்னர் இஸ்ஹாக்கின் வழித்தோன்றல்களுக்குக் கிடைத்தது. யஃகூப், யூசுப், மூஸா, தாவூத், சுலைமான், ஈஸா (அலை) ஆகியோர் இஸ்ஹாக்கின் வழித்தோன்றல்களில் உள்ள மிகச் சிறந்த நபிமார்களாவர்.

இஸ்ஹாக்கின் வழித்தோன்றல்களில் ஈஸா (அலை) அவர்களுக்குப் பின்னர் எந்த நபியும் வந்ததில்லை. பின்னர் நபித்துவம் இஸ்மாயீல் (அலை) அவர்களின் வழித்தோன்றலுக்குத் திரும்பியது. பிறகு அல்லாஹ் முஹம்மத் (ஸல்) அவர்களை இறுதி நபியாகத் தேர்ந் தெடுத்துக் கொண்டான். ஏனெனில் அவர்களுடைய தூதுத்துவம் இறுதியாகவும் அவர்களுக்கு இறக்கி யருளப்பட்ட வேதமான குர்ஆன் மனித சமுதாயத்திற்கு இறுதி வேதமாகவும் இருக்க வேண்டும் என்பதே நோக்கம்.

எனவே தான் அவர்களுடைய தூதுத்துவம் பரிபூரண மானதாகவும் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் அரேபியர்களுக்கும் அரேபியர் அல்லாதவர்களுக்கும் பொதுவானதாகவும் எல்லா காலத்திற்கும் எல்லா இடத்திற்கும் பொருத்த மானதாகவும் வந்துள்ளது. அத்தூதுத்துவம் எந்த நன்மையையும் எடுத்துச் சொல்லாமல் இல்லை. எந்தத் தீமையையும் எச்சரிக்காமலில்லை. முஹம்மது (ஸல்) கொண்டு வந்த மார்க்கத்தைத் தவிர வேறு எந்த

மார்க்கத்தையும் எவரிடமிருந்தும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

## முஹம்மது நபி(ஸல்)

முஹம்மத் நபி(ஸல்) அவர்களை அல்லாஹ் இறுதித் தூதராக அனுப்பி வைத்தான். அவரது தூதுத்துவத்தை இறுதித் தூதுத்துவமாக ஆக்கினான். அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும் அதற்கு மாறாக வணக்க வழிபாடு என்கிற பெயரில் மக்கள் ஏற்படுத்தி வைத்துள்ள சிலை வணக்கம் போன்றவற்றை விட்டு விட வேண்டும் என மக்களுக்கு வழிகாட்டுவதற்காக அல்லாஹ் அவரை அனுப்பி வைத்தான்.

முஹம்மது(ஸல்)தமது நாற்பதாம் வயதில் மக்காவில் இறைத்தூதராக அனுப்பப்பட்டார். நபியாக அனுப்பப் படுவதற்கு முன் அவர் தம் சமுதாயத்திலேயே ஏன் மனித குலத்திலேயே உயர்ந்த குணங்களைக் கொண்டவராக திகழ்ந்தார். மேலும் உண்மைக்கும் நம்பிக்கைக்கும் உயர்ந்த ஒழுக்கங்களுக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். எந்த அளவுக்கு எனில் அவருடைய சமுதாயத்தவர்கள் அவரை 'நம்பிக்கையாளர்' என்றே அழைத்தனர்.

முஹம்மத் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்தார். அல்லாஹ் அவருக்கு வஹீ எனும் இறையருட் செய்தி மூலம் திருக்குர்ஆனை வழங்கினான். இதுபோன்ற ஒரு குர்ஆனை யாரேனும் இயற்றிக் கொண்டு வர முடியுமா?

என அல்லாஹ் இந்தத் திருக்குர்ஆனில் மனித குலம் முழுவதற்கும் சவால் விடுகிறான்.

## குலமும் வாழ்வும்

முஹம்மது நபியின் தந்தை அப்துல்லாஹ். அவரது பாட்டனார் அப்துல் முத்தலிப். அவரது முப்பாட்டனார் ஹாஷிம். இவர் இப்ராஹீம் நபியின் மகனான இஸ்மாயீல் நபியின் சந்ததியினரைச் சார்ந்தவராவார். முஹம்மது நபியின் தாயார் ஆமினா. இவரது தந்தை வஹ்ப். இவரது பாட்டனார் அப்து மனாஃப். முப்பாட்டனார் ஸஹ்ரா. ஸஹ்ரா முஹம்மது நபியின் பாட்டனாரின் சகோதரர் ஆவார்.

நபி(ஸல்) அவர்களின் தந்தை அப்துல்லாஹ் ஆமினாவை மணமுடித்த மூன்றே மாதங்களில் ஆமினா கருவுற்றார். கர்ப்ப காலங்களில் எந்த சிரமத்தையும் அவர் உணரவில்லை. பிறகு ஆமினா அழகிய தோற்றமும் சீரான உடலமைப்பும் கொண்ட ஒரு குழந்தையை ஈன்றார். இது கி.பி. 571 ல் நடந்தது.

நபியவர்கள் தம் தாயின் வயிற்றில் இருக்கும்போதே தந்தை இழந்தார்கள். பின்னர் அவர்களை அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் பராமரித்தார். நபியவர்களுக்கு ஆமினா அம்மா பாலூட்டியது மூன்றே மாதங்கள் தான். பின்னர் அக்குழந்தைக்குப் பாலூட்டுவதற்காக ஹலீமா ஸஃதிய்யா எனும் ஒரு கிராமியப் பெண்ணிடம் பாட்டனார் ஒப்படைத்தார்.

ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்குரிய காரணிகள் தம் குழந்தைகளுக்கு முழுமையாகக் கிடைப்பதற்காக தம் குழந்தைகளைப் பாலூட்டி வளர்க்கும்படி கிராம வாசிகளிடம் ஒப்படைக்கும் வழக்கம் அரேபியர்களிடம் இருந்து வந்தது. ஹலீமா அக்குழந்தை விஷயத்தில் பல ஆச்சரியங்களைக் கண்டார். அவற்றுள் சில:

ஹலீமா தன் கணவருடன் மெதுவாகச் செல்லக் கூடிய, மெலிந்த கழுதையில் மக்காவுக்கு வந்திருந்தார். திரும்பிச் செல்லும் வழியில் ஹலீமா அக்குழந்தையை தனது மடியில் வைத்திருக்கும் போது அக்கழுதை வேகமாக ஓட ஆரம்பித்தது. எல்லா வாகனங்களையும் முந்திச் சென்றது. இதனால் உடன் செல்லும் பயணக் கூட்டத்தினர் அனைவரும் ஆச்சரியப்படலானார்கள்.

மேலும் ஹலீமா கூறியதாவது: அவரது மார்பகத்தில் சிறிதளவே பால் சுரந்தது. அதனால் அவரது பால்குடிக் குழந்தை கடும் பசியின் காரணமாக எப்போதும் அழுது கொண்டிருக்கும். ஆனால் நபி(ஸல்)அவர்களுக்கு அவர் பாலூட்டியபோது அவரது மார்பில் பால் அபரிமிதமாகச் சுரந்தது. அதனால் ஹலீமா நபியுடன் சேர்த்து தனது குழந்தைக்கும் வயிறாறப் பாலூட்டலானார்.

மேலும் ஸஃது கிளையாரின் பகுதியிலிருந்த வறண்டு போயிருந்த தனது பூமியைப் பற்றியும் கூறினார்: இக் குழந்தைக்குப் பாலூட்டும் பாக்கியம் பெற்றதும் அவரது பூமியும் கால்நடைகளும் பலன் தந்தன. அவரது கஷ்ட மும் வறுமையும் மாறி மகிழ்வும் செழிப்பும் மலர்ந்தது.

இரண்டாண்டுகளுக்குப் பிறகு அக்குழந்தையை மக்காவில் அதன் அன்னையிடமும் பாட்டனாரிடமும் கொண்டு வந்து சேர்த்தார். எனினும் அக்குழந்தையின் பாக்கியத்தால் தனது நிலையில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்ட ஹலீமா இரண்டாம் முறையும் அக்குழந்தையைத் தன்னுடன் வைத்துக் கொள்ள இணங்குமாறு ஆமினாவை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். ஆமினாவும் சம்மதித்து விடவே ஹலீமா அக்குழந்தை யுடன் ஸஃது கிளையாரிடம் மீண்டும் திரும்பி வந்தார். அவரது உள்ளத்தில் மகிழ்ச்சி நிரம்பியது.

பின்னர் இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஹலீமா அக்குழந்தையை அவரது தாயிடம் திரும்பக் கொண்டு வந்தார். அப்போது அக்குழந்தையின் வயது நான்கு. தாய் தனது மரணம் வரையில் தனது குழந்தையைப் பராமரித்தார். அப்பொழுது அக்குழந்தைக்கு வயது ஆறு. அதன் பிறகு அவருடைய பாட்டனார் அப்துல் முத்தலிப் இரண்டு ஆண்டுகள் பராமரித்து வந்தார். அவரது மரணத்திற்குப் பிறகு அக்குழந்தையை பெரிய தந்தை அபூதாலிப் பராமரித்து வந்தார். அபூதாலிப் தனது குழந்தைகளைப் போலவே அக்கரையோடு இக்குழந்தையையும் பராமரித்தார். ஆனாலும் அபூதாலிப் ஏழையாக இருந்ததனால் முஹம்மது நபிக்கு செல்வச் செழிப்பான சுகபோகமான வாழ்க்கைப் பழக்கம் ஏற்பட வில்லை.

முஹம்மது நபி அவர்கள் ஸஃது கிளையாரின் கிராமத்தில் இருக்கும்போதே தம் பால்குடி சகோதரர்

களுடன் ஆடுகளை மேய்ப்பதற்குப் பழகிக் கொண் டார்கள். அதன் பிறகு அவர்கள் மக்காவாசிகளுக்குரிய ஆடுகளை மேய்க்கலானார்கள். அதற்காக கிடைக்கும் கூலி முழுவதையும் தம்முடைய பெரிய தந்தை அபூதாலிபிடம் கொடுத்து விடுவார்கள்.

நபி(ஸல்)அவர்களுக்கு பன்னிரண்டு வயது இருக்கும் போது தமது பெரிய தந்தை அபூதாலிபுடன் வியாபாரத் திற்காக சிரியா புறப்பட்டார்கள். ஒரு முறை குவைலிதின் மகள் கதீஜாவினுடைய பொருட்களுடன் வியாபாரத் திற்காக சிரியாவுக்குப் பயணமானார்கள். கதீஜா மக்காவில் செல்வச் சீமாட்டியாக இருந்தார். வியாபாரத் திற்காக மற்றவருக்குக் கொடுக்கும் கூலியை விடவும் சிறந்த கூலியை முஹம்மதுக்கு கொடுத்தார். ஏனெனில் அவர் பன்மடங்கு இலாபங்களை ஈட்டித் தந்தார்.

அப்பயணத்தில் முஹம்மதுடைய உயர்ந்த குணங் களையும் சிறப்புக்களையும் கண்ட கதீஜாவின் அடிமை மைஸரா அவற்றை கதீஜாவிடம் தெரிவித்த போது அவருக்கு முஹம்மதின் மீது பிரியம் ஏற்பட்டது. கதீஜா ஏற்கனவே திருமணமாகி விதவையாக இருந்தார். தற்போது முஹம்மதை தமக்கு கணவராக்கிக் கொள்ள விரும்பினார். சிறப்புக்குரிய அந்தத் திருமணம் இனிதே நடந்து முடிந்தது. அப்போது நபியவர்களின் வயது இருபத்தைந்து. கதீஜாவின் வயதோ சுமார் நாற்பது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நாற்பதாம் வயதை நெருங்கியபோது தனிமையை விரும்பினார்கள்.

அதனால் மக்காவுக்குப் பக்கத்திலுள்ள ஒரு மலையில் ஹிரா என்னும் குகையில் தனித்திருந்தார்கள். பல இரவுகள் அங்கு வணக்கத்தில் ஈடுபட்டார்கள். பின்னர் தம் வீட்டிற்குத் திரும்பி உணவு, தண்ணீரைத் தயார் செய்து கொண்டு மீண்டும் அங்கு செல்வார்கள்.

ஒரு நாள் இரவு அவர்கள் ஹிரா குகையில் இருக்கும் போது அவர்களிடம் வானத்திலிருந்து ஜீப்ரீல் எனும் மலக்கு (வானவர்) வந்து, 'நீர் ஓதுவீராக!' எனக் கூறினார்கள். அதற்கு நபி(ஸல்)அவர்கள், 'எனக்கு ஓதத் தெரியாது' எனக் கூறினார்கள். ஜீப்ரீல்(அலை) அவர்கள் இரண்டாம் முறையும் மூன்றாம் முறையும் ஓதுவீராக எனக் கூறினார்கள்.

மூன்றாம் முறை "படைத்த உம் இறைவனின் திருப் பெயர் கொண்டு ஓதுவீராக! கருவுற்ற சினை முட்டை யிலிருந்து அவன் மனிதனைப் படைத்தான். ஓதுவீராக! உம் இறைவன் எத்தகைய மாபெரும் அருட்கொடை யாளன் எனில் அவனே எழுது கோலின் மூலம் கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றை யெல்லாம் கற்றுக் கொடுத்தான்" (96:1-5) எனக் கூறி னார்கள். பின்னர் அவர்கள் சென்று விட்டார்கள்.

கல்வி கற்பதை ஏவுகின்ற மனிதப் படைப்பின் ஆரம்பத்தை தெளிவுபடுத்துகின்ற இவ்வசனங்கள் மூலமாகத் தான் நபி(ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் விடமிருந்து வஹி எனும் இறைச் செய்தி இறங்கியது.

அதன் பிறகு நபி(ஸல்)அவர்கள் அச்சத்தால் உள்ளம் நடுங்கியவர்களாக தம் மனைவி கதீஜாவிடம் வந்து ‘என்னைப் போர்த்துங்கள்! என்னைப் போர்த்துங்கள்!’ எனக் கூறினார்கள். அவர்கள் போர்த்தினார்கள். இறுதியில் பயம் அவர்களை விட்டும் நீங்கியதும் நடந்த நிகழ்ச்சியை கதீஜாவிடம் எடுத்துச் சொல்லி தம் உயிருக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ என தாம் அஞ்சுவ தாகவும் கூறினார்கள்.

அப்போது கதீஜா, ‘அப்படியெல்லாம் ஒன்றும் ஆகாது. அல்லாஹ்வின் மீது ஆணையாக அல்லாஹ் ஒருபோதும் உங்களை இழிவுபடுத்த மாட்டான். ஏனெனில் நீங்கள் சொந்த பந்தங்களுடன் இணைந்து வாழ்கிறீர்கள், ஆதரவற்றோரை அரவணைக்கிறீர்கள், வறியோருக்காக உழைக்கிறீர்கள். விருந்தினரை உபசரிக்கிறீர்கள். சத்திய சோதனைகளில் ஆட்பட்டோருக்காக உதவு கிறீர்கள்’ எனக் கூறினார்கள்.

அதன் பிறகு மீண்டும் ஜிப்ரீல் வந்தார். அதுபற்றி முஹம்மத்(ஸல்)அவர்கள் கூறியதாவது: ஒரு நாள் நான் நடந்து சென்று கொண்டிருக்கும்போது வானிலிருந்து ஒரு சப்தத்தைக் கேட்டேன். எனது பார்வையை உயர்த்தியபோது ஹிராக் குகையில் வந்த அதே ஜிப்ரீல் வந்தார். இவ்வாறு கூறிவிட்டு, அவர் குறித்து தாம் அஞ்சியதாகவும் ஆனாலும் அந்த அச்சம் முதல் தடவை போல் இருக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். பிறகு தமது குடும்பத்தாரிடம் சென்று துணியால் போர்த்திக்

கொண்டார்கள். பிறகு அல்லாஹ் பின்வரும் வசனங்களை அவர்களுக்கு இறக்கிருளினான்:

போர்த்திக் கொண்டிருப்பவரே! எழுந்து எச்சரிக்கை செய்வீராக! உம் இறைவனைப் பெருமைப்படுத்துவீராக! உம்முடைய ஆடைகளைத் தூய்மைப்படுத்துவீராக! அசுத்தத்தை வெறுப்பீராக! (74:1-5)

இதன் கருத்து என்னவெனில்,ஆடையால் போர்த்திக் கொண்டவரே! எழுந்து திருக்குர்ஆனைக் கொண்டு மக்களுக்கு எச்சரிக்கை செய்வீராக! அல்லாஹ்வின் அழைப்பை அவர்களுக்கு எடுத்துச் சொல்வீராக! அசுத்தங்களிலிருந்து உமது ஆடைகளை தூய்மைப் படுத்துவீராக! சிலைகளை வெறுப்பீராக! என்பதாகும்.

அதன் பிறகு வஹீ தொடர்ந்து வந்து கொண்டு இருந்தது. அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும் என்பதன் பக்கமும் மக்களுக்காக அல்லாஹ் தேர்ந்தெடுத்துக் கொண்ட இஸ்லாமிய மார்க்கத்தின் பக்கமும் மக்களை அழைக்குமாறு அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் கட்டளையிட்டான். அதன்படி நபி (ஸல்) அவர்கள் விவேகத்துடனும் அழகிய அறிவுரைகள் மூலமும் மக்களை அழைக்கலானார்கள்.

அந்த அழைப்பை முதன் முதலாக பெண்களில் அவர்களின் மனைவி கதீஜா ஏற்றுக் கொண்டார்கள். பிறகு ஆண்களில் அவர்களுடைய நண்பர் அபூபக்கர் ஸித்தீக் அவர்களும் சிறுவர்களில் அவர்களின் பெரிய

தந்தையின் மகன் அலீயும் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். அதன் பிறகு தொடர்ந்து மக்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தில் இணைந்தார்கள். இணை வைப்பாளர்கள் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு கடும் தொல்லைகள் கொடுக்கலானார்கள். ஆயினும் நபி அவர்கள் மக்காவில் தொடர்ந்து பதிமூன்று ஆண்டுகள் மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்துக் கொண்டு இருந்தார்கள். நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் தோழர்களுக்கும் நிராகரிப்பாளர்களின் தொல்லைகள் அதிகமாகிக் கொண்டே வந்தன. அதனால் நபி(ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் மக்காவைத் துறந்து மதினாவுக்குச் சென்றார்கள்.

நபி(ஸல்) அவர்கள் தொடர்ந்து பிரச்சாரத்திலேயே ஈடுபட்டார்கள். பல வருடங்களுக்குப் பிறகு மீண்டும் மக்கா திரும்பினார்கள். அப்போது மக்காவாசிகள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றனர். அதன் பிறகு நபி (ஸல்)அவர்கள் தமது அறுபத்து மூன்றாம் வயதில் மரணமடைந்தார்கள். நுபுத்துவத்திற்கு முன் நாற்பது வருடங்களும் நபியாக இருபத்து மூன்று வருடங்களும் வாழ்ந்தார்கள்.

நபி(ஸல்)அவர்கள் மூலம் அல்லாஹ் தூதுத்துவத்தை நிறைவு செய்து விட்டான். நபி (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதை எல்லா மனிதர்களுக்கும் கடமை யாக்கினான். அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர் இவ் வுலகில் நற்பாக்கியம் அடைவார். மறுமையில் சொர்க்கம்

செல்வார். அவர்களுக்கு மாறு செய்தவர் இவ்வுலகில் துர்ப்பாக்கிம் அடைந்து மறுமையில் நரகம் செல்வார். நபி(ஸல்)அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களின் தோழர்கள் நபி(ஸல்)அவர்களின் வழிமுறையைப் பின்பற்றி நடந்து அவர்களின் பிரச்சாரத்தை மக்களுக்கு எத்தி வைத்தனர். இஸ்லாத்தை உலகம் முழுவதும் பரப்பினர்.

## நபிகள் நாயகத்தின் நற்குணங்கள்

நபி(ஸல்)அவர்கள் மக்களில் சிறந்த குணங்களை உடையவர்களாகத் திகழ்ந்தார்கள். நபியாக ஆவதற்கு முன்பே நற்குணங்களில் தனித்துவம் பெற்று விளங்கினார்கள். நபியாக ஆன பிறகோ நற்குணங்கள் அவர்களுக்கு அதிகரிக்கவே செய்தன. அல்லாஹ் அவர்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றான்: நீர் மகத்தான குணத்தில் இருக்கிறீர். (68:4) அவர்கள் நற்குணங்களின் பால் மக்களை அழைப்பவர்களாக, ஆர்வமூட்டுபவர்களாக இருந்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்கு மத்தியில் எந்த நற்குணங்களின் பால் மக்களை அழைத்தார்களோ அந்த நற்குணங்களுக்கு மிகச் சிறந்த முன்மாதிரியாய்த் திகழ்ந்தார்கள். நபியவர்கள் தாம் கூறும் ஞானங்கள் மற்றும் அறிவுரைகள் மூலம் நற்குணங்களை தம் தோழர்களிடையே விதைப்பதற்கு முன் அவற்றை தம் நடைமுறையின் மூலம் விதைத்தார்கள்.

அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் நபி (ஸல்) அவர்களுக்கு பத்து வருடங்கள் பணிவிடை

செய்துள்ளேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் சீ என்று என்னிடம் கூறியதே கிடையாது. எந்த விஷயம் குறித்தும் ஏன் இப்படிச் செய்தாய்? இவ்வாறு செய்திருக்கக் கூடாதா? என்று கேட்டதும் கிடையாது. (முஸ்லிம்-2309)

அனஸ்(ரலி) மேலும் கூறியதாவது: நான் நபி(ஸல்) அவர்களுடன் சென்று கொண்டிருந்தேன். ஓரப் பகுதி பருமனான போர்வை ஒன்று அவர்கள் மீது இருந்தது. ஒரு கிராமவாசி வந்து அதைப் பிடித்து பலமாக இழுத்தார். எந்த அளவுக்கு எனில், அவர் பலமாக இழுத்ததனால் நபி(ஸல்) அவர்களின் தோள் பகுதியில் அதன் அடையாளம் பதிந்திருந்ததை நான் பார்த்தேன். பிறகு அந்த கிராமவாசி, 'உம்மிடமுள்ள அல்லாஹ்வின் செல்வத்திலிருந்து எனக்குத் தரும்படி உத்தரவிடும்' என்று கூறினார். அப்போது நபி(ஸல்)அவர்கள் அவரைப் பார்த்துச் சிரித்துவிட்டு, அவருக்கு உதவி வழங்கும்படி கட்டளையிட்டார்கள். (புகாரி-5809)

நபி(ஸல்) அவர்கள் தம் வீட்டில் என்ன செய்வார்கள்? என அவர்களுடைய மனைவி ஆயிஷா (ரலி) அவர்களிடம் வினவப்பட்டபோது அவர்கள் கூறினார்கள்: நபி(ஸல்) அவர்கள் வீட்டு வேலைகளில் தமது மனைவிக்கு உதவி செய்வார்கள். தொழுகை நேரம் வந்து விட்டால் தொழுகைக்குப் புறப்பட்டுவிடுவார்கள். (புகாரி-676)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விடவும் அதிகம் புன்னகை பூப்பவர் யாரையும் நான் பார்த்ததில்லை என

அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் (ரலி) அறிவிக்கிறார்கள். (திர்மிதி-3641)

**நபி(ஸல்)அவர்களின் பிரபலமான குணநலன்கள்:**

அவர்கள் ஈகைக் குணம் கொண்டவர்கள், கிஞ்சிற்றும் கஞ்சத்தனம் செய்ததில்லை. தைரியமிக்கவர்கள், சத்தியத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்கியதில்லை. நீதி மிக்கவர்கள், அநீதியான தீர்ப்பை ஒருபோதும் வழங்கியதில்லை. தமது வாழ்வு முழுவதும் வாய்மை மிக்கவர்களாகவும் நம்பிக்கைக்குரியவர்களாகவுமே திகழ்ந்தார்கள். 'நபி(ஸல்)அவர்களிடம் எதையும் கேட்டு அவர்கள் இல்லையென்று சொன்னது கிடையாது' என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்கள். (புகாரி-6034, முஸ்லிம்-2311)

நபி(ஸல்) தமது தோழர்களிடம் நகைச்சுவையுடன் பழகுபவர்களாக, அவர்களுடன் உறவாடுபவர்களாக, அவர்களின் குழந்தைகளுடன் விளையாடுபவர்களாக, குழந்தைகளை தமது மடியில் அமர்த்துபவர்களாக, விருந்தழைப்பை ஏற்பவர்களாக, நோயாளிகளை சந்திப்பவர்களாக, காரணம் கூறுபவர்களின் காரணத்தை ஏற்பவர்களாக இருந்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களை அவர்களுக்குப் பிரியமான பெயரைக்கொண்டே அழைப்பார்கள். தம்முடன் பேசுகின்ற எவரது பேச்சையும் துண்டிக்க மாட்டார்கள். அபூகதாதா(ரலி) அறிவிப்பதாவது: நஜ்ஜாஷி மன்னரின் தூதுக்குழு வந்தபோது அவர்களுக்கு நபி(ஸல்)அவர்கள் பணிவிடை செய்யலானார்கள். 'உங்களுக்காகவே

நாங்கள் இருக்கிறோமே' என்று நபித்தோழர்கள் கூறியதும், 'அவர்கள் நம் தோழர்களை கண்ணியப் படுத்தினார்கள். நான் அதற்கு ஈடு செய்ய விரும்புகிறேன்' என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (ஷுஅபுல் ஈமான்)

மேலும் நபி(ஸல்)அவர்கள், 'நானும் அல்லாஹ்வுடைய அடிமைதான். ஒரு அடிமை சாப்பிடுவதுபோலவே நானும் சாப்பிடுகிறேன். ஒரு அடிமை உட்காருவது போலவே நானும் உட்காருகிறேன்' என்று கூறினார்கள்.

அவர்கள் கழுதையில் பயணம் செய்திருக்கிறார்கள். வரியவர்களை நலம் விசாரிப்பார்கள். ஏழைகளுடன் அமர்ந்திருப்பார்கள். பிரபலமான ஒரு ஆங்கிலேயத் தத்துவவாதி தாமஸ் கார்லைல் (Thomas Carlale) தன்னுடைய 'HEROES' மாபெரும் தலைவர்கள்) எனும் நூலில் தனது கிறிஸ்தவ சமுதாயத்திற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அதிகம் கூறியிருக் கின்றார். அதில் ஒன்று, 'இஸ்லாம் போலியானது, முஹம்மத் போலியானவர், ஏமாற்றுக்காரர் என்று கூறப் படுவதை தற்காலத்தில் ஒருவர் செவியேற்பது மிகப் பெரிய இழிவாகும்' என்று அவர் கூறியிருப்பதாகும்.

## நபிகள் நாயகத்தின் அற்புதங்கள்

நபி(ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட மிகப் பெரும் அற்புதம் திருக்குர்ஆன். அது பண்டிதர்களனைவரையும் இயலமலாக்கியது. இதுபோன்ற ஒரு அத்தியாயத்தைக் கொண்டு வாருங்கள் என அல்லாஹ் திருக்குர்ஆன்

மூலம் எல்லோருக்கும் சவால் விட்டான். திண்ணமாக திருக்குர்ஆன் ஓர் அற்புதம் தான் என்பதை இறை நிராகரிப்பாளர்கள் ஒப்புக் கொண்டனர். இந்த சவால் இன்னமும் இருந்து கொண்டேதான் இருக்கின்றது.

இணைவைப்பவர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இடம் சந்திரனை இரு கூறாகப் பிளந்து காட்ட முடியுமா என சவால் விட்டனர். அதன்படி நபி(ஸல்) அவர்கள் தம் இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். சந்திரன் இரண்டாகப் பிளந்தது. பல முறை அவர்களின் விரல்களி லிருந்து நீர் பீறிட்டிருக்கிறது. அவர்களின் உள்ளங் கையிலிருந்த கல் தஸ்பீஹ்- இறைத்துதி செய்தது. நபிகள் நாயகத்தைக் கொல்வதற்காக ஒரு யூதப் பெண் விஷம் கலந்த ஆட்டிறைச்சியை அன்பளிப்பாக வழங்கியபோது அது அவர்களிடம் பேசியது.

ஒரு கிராம வாசி தனக்கொரு அற்புதம் காட்டும்படி அவர்களிடம் வேண்டியபோது நபியவர்கள் ஒரு மரத்திற்கு கட்டளை யிட்டார்கள். அம்மரம் வந்தது. பிறகு அதைத் திரும்பிச் செல்லுமாறு ஏவியதும் அதன் இடத்திற்கே அது திரும்பிச் சென்றது. பாலில்லாத ஒரு ஆட்டின் மடியை அவர்கள் தடவியதும் அதில் பால் சுரந்தது. அதைக் கறந்து தாமும் அருந்தி தம் நண்பர் அபூபக்ருக்கும் அருந்தக் கொடுத்தார்கள்.

அலீ(ரலி) அவர்களுக்கு கண் வலி ஏற்பட்டபோது அவர்களின் கண்களில் நபிகள் நாயகம் உமிழ்ந்ததும் அவர்கள் குணமடைந்தார்கள். ஒரு நபித்தோழரின் கால்

முறிந்து விட்ட போது அதை நபிகள் நாயகம் தமது கையால் தடவியதும் அது குணமடைந்தது.

அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்களுக்காக நீண்ட ஆயுளுக்கும் அதிகமான செல்வத்திற்கும் பிள்ளைப் பேற்றிற்கும் பிரார்த்தித்தார்கள். அவற்றில் அவர்களுக்கு அல்லாஹ் பரகத் அபிவிருத்தி செய்யும்படியும் வேண்டி னார்கள். அதன்படி அவர்களுக்கு 120 குழந்தைகள் பிறந்தன. அவர்களின் பேரீத்த மரம் வருடத்தில் இரு முறை காய்த்தன. சாதரணமாக ஒரு மரம் ஆண்டுக்கு ஒரு முறைதான் காய்க்கும். அவர் 120 ஆண்டுகள் வாழ்ந்தார்.

ஒரு முறை (வெள்ளிக் கிழமை) நபிகள் நாயகம் மிம்பரில் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது அவர்களிடம் பஞ்சம் குறித்து முறையிடப்பட்டது. அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். வானில் மேகமே இல்லாதிருந்தும் உடனே மலைகள் போன்ற மேகங்கள் உருவாகி மறு வெள்ளிக் கிழமை வரை கடும் மழை பொழிந்தது. அதனால் கன மழை பற்றி மீண்டும் அவர்களிடம் முறையிடப்பட்டது. மீண்டும் அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ததும் உடனே மழை நின்றது. மக்கள் வெயிலில் நடந்து சென்றனர்.

அகழ்ப் போரில் கலந்து கொண்ட ஆயிரம் பேருக்கு சுமார் 2.5 கிலோ கோதுமையையும் ஒரு ஆட்டையும் கொண்டு உணவளித்தார்கள். அவர்கள் அனைவரும் வயிறு நிரம்ப உணவு உட்கொண்டு திரும்பிச் சென்றனர்.

உணவு குறையாமல் அப்படியே இருந்தது. மக்காவில் உள்ள இறைநிராகரிப்பாளர்கள் நூறு பேர் நபி(ஸல்) அவர்களைக் கொல்வதற்காக அவர்களின் வீட்டை முற்றுகையிட்டனர். அப்போது நபியவர்கள் அவர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றார்கள். அவர்களால் நபியவர்களைப் பார்க்க முடியவில்லை.

நபிகள் நாயகத்தைக் கொல்வதற்காக சுராக்கா பின் மாலிக் என்பவர் அவர்களைப் பின் தொடர்ந்தார். அவர்களை நெருங்கியதும் நபியவர்கள் அவருக்கு எதிராகப் பிரார்த்தித்தார்கள். அவருடைய குதிரையின் பாதங்கள் மண்ணில் புகுந்தன. இதுபோன்ற நபி(ஸல்) அவர்களுடைய அற்புதங்கள் ஏராளம் உள்ளன. அவை அனைத்தும் அவர்களுடைய தூதுத்துவம் உண்மை யானது என்பதை உறுதி செய்வதற்காக அல்லாஹ் விடமிருந்து ஏற்பட்டதாகும்,

## இஸ்லாத்தின் அடிப்படைகள்

### 1. அல்லாஹ்வை நம்புவது

இது தான் இஸ்லாமிய மார்க்கத்தின் அடித்தளம். அல்லாஹ்வை நம்புவது என்றால் அல்லாஹ் ஒருவன் இருக்கிறான், அவன் தான் அனைத்தையும் படைத்தவன், அனைத்துக்கும் எஜமான், அகில உலகங்களையும் படைத்துப் பரிபாலித்து நிர்வகிப்பவன் அவன் மட்டுமே, அவன் தான் வணக்கத்திற்குத் தகுதியானவன், அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை,

அவன் பரிபூரணமான தன்மைகளைக் கொண்டவன், அனைத்துக் குறைகளை விட்டும் நீங்கியவன், படைப் பினங்களுக்கு ஒப்பாவதை விட்டும் பரிசுத்தமானவன் என உறுதியாக நம்புவதாகும்.

அகிலத்திலுள்ள அனைத்துப் படைப்பினங்களையும் ஒருவன் சிந்தித்துப் பார்த்தால், திண்ணமாக அவை தாமாகத் தோன்றியிருக்க முடியாது. படைப்பாளன் இல்லாமல் அவை உருவாகியிருக்க முடியாது. மாறாக அவற்றைப் படைத்தவன் அல்லாஹ் தான் என்பதைப் புரிந்து கொள்வான்.

## 2. வானவர்களை நம்புவது

வானவர்கள் நம் கண்களுக்குப் புலப்படாத ஒரு படைப்பினம். அல்லாஹ்வை வழிபட்டுக் கொண்டிருப் பவர்கள். படைத்துப் பரிபாலனம் செய்யும் சிறப்புத் தன்மைகளோ கடவுள் தன்மைகளோ எதுவும் அவர்க ளுக்குக் கிடையாது. தனது ஆணைக்கு முழுமையாகக் கீழ்ப்படியும் தன்மையையும் அதனை அமல்படுத்தும் ஆற்றலையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியுள்ளான்.

ஒவ்வொரு முஸ்லிமும் அப்படியொரு படைப்பினம் உண்டு என நம்ப வேண்டும். அவர்கள் அதிக அளவில் உள்ளனர். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ்வை தவிர வேறு யாரும் அறிய முடியாது. மேலும் அவர்களில் யாருடைய பெயரை நாம் அறிந்துள்ளோமோ அந்த வானவர்களை அவர்களின் பெயருடன் நம்ப வேண்டும், ஜிப்ரீல், மாலிக், மீக்காயீல் போன்று. மேலும் அவர்களின்

தன்மைகளிலும் பணிகளிலும் நாம் அறிந்தவற்றையும் நம்ப வேண்டும்.

## 3. வேதங்களை நம்புவது

சத்தியத்தை விளக்குவதற்காகவும் அதன் பால் மக்களை அழைப்பதற்காகவும் அல்லாஹ், நபிமார்கள் மற்றும் தூதர்களில் சிலருக்கு வேதங்களை இறக்கி அருளினான் என ஒரு முஸ்லிம் நம்ப வேண்டும். உதாரணமாக தவ்ராத், இன்ஜீல், ஸபூர். மேலும் நபிமார்களில் இறுதி நபியான முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் இறக்கியருளிய குர்ஆனையும் நம்ப வேண்டும்.

**குர்ஆன்:** இது மனித குலத்துக்கு அல்லாஹ் வழங்கி யிருக்கும் இறுதி வேதமாகும். இவ்வேதம் கூறிய பிரகாரம் செய்யாத எந்தச் செயலையும் எவரிடத்தில் இருந்தும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான். இந்தக் குர்ஆன் முந்தைய வேதங்களை முடிவுகட்டக் கூடியதாகவும் உண்மைப்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

இதனைப் பாதுகாக்க அல்லாஹ்வே பொறுப் பேற்றுள்ளதால் இதில் இடைச்செருகலோ மாற்றங்களோ நுழைந்திட முடியாது. இது இந்தக் குர்ஆனுக்குரிய தனிச் சிறப்பாகும். முந்தைய வேதங்கள் அப்படியல்ல. அவற்றில் இடைச்செருகல்களும் மாற்றங்களும் நுழைந்து விட்டன. காரணம் குர்ஆனைப்போல் அவற்றையும் பாதுகாக்க அல்லாஹ் பொறுப்பேற்கவில்லை.

திருக்குர்ஆன் தனது நடையில் மிகச் சிறந்த இலக்கிய நயமும் எழிலும் கொண்டதாக இருக்கிறது. ஷரீஅத் சட்டங்களைப் பொருத்தவரையில் அது பரிபூரணமான சட்டதிட்டங்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. கடவுட் கொள்கையிலும் மறைவான விஷயங்களிலும் மனிதர்கள் யாரும் அறிந்திராதவற்றை மனித அறிவுக்கே எட்டாதவற்றை எடுத்துச் சொல்கின்றது. இயல்பாகவே திருமறைக் குர்ஆன் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் காலத்திலும் அவர்களுக்குப் பின்னுள்ள காலத்திலும் அதற்குப் பிறகு 10 நூற்றாண்டுகள் வரையிலும் யாரும் அறிந்திராத சில அடிப்படைகளையும் சட்டங்களையும் சுட்டிக்காட்டுகின்றது. அதுமட்டுமல்ல முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு 1300 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டு பிடிக்கப்பட்ட, இன்னும் இதுவரையிலும் கண்டுபிடிக்கப் படாத சில விஷயங்களைப் பற்றிய சமிக்ஞைகளும் திருக்குர்ஆனில் இருக்கின்றன.

இந்தக் குர்ஆன் எத்தகைய வேதம் எனில் இதன் மூலம் அல்லாஹ் அன்றைய மக்களுக்கு, ‘இதிலுள்ள அத்தியாயங்களைப் போன்று 10 அத்தியாயங்களையோ அல்லது குறைந்தபட்சம் ஒரே ஒரு அத்தியாயத்தை யேனும் கொண்டுவர முடியுமா?’ என சவால் விட்டான். அவர்களால் முடியவில்லை. அந்த சவால் இன்று வரை சவாலாகவே உள்ளது. அந்தச் சவாலை ஏற்றுச் செயல்பட இன்று வரை எவராலும் முடியவில்லை.

திருக்குர்ஆனின் அற்புதம் நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் அந்த அற்புதம் அதனுடைய வார்த்தைகள்,

அது கூறும் மறைவான விஷயங்கள் மற்றும் ஷரீஅத் சட்டங்களில் மட்டுமல்ல திருக்குர்ஆன் முழுவதிலும் இருக்கிறது.

## 4. இறைத்தூதர்களை நம்புவது

அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும். அதற்கு மாற்றமான அனைத்தையும் விட்டொழிக்க வேண்டும் என மக்களுக்குப் பிரச்சாரம் செய்வதற்காக அல்லாஹ் இறைத்தூதர்களை அனுப்பியுள்ளான் என ஒரு முஸ்லிம் நம்ப வேண்டும். இறைத்தூதர்கள் இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள். படைத்துப் பரிபாலிக்கும் சிறப்புத் தன்மைகளோ வழிபடுவதற்கான தகுதிகளோ எதுவும் அவர்களுக்குக் கிடையாது. நோய், மரணம்,பசி, தாகம் போன்ற மனித இயல்பைச் சேர்ந்த தன்மைகள் இவர்களுக்கும் உண்டு. மேலும், இறைத்தூதர்கள் மனிதர்களில் சிறந்தவர்கள். அல்லாஹ் அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தூதுத்துவத்தை வழங்கினான்.

இறைத்தூதர்களை நம்பிக்கை கொள்வதில் நான்கு விஷயங்கள் உள்ளன: 1. அவர்களின் தூதுத்துவம் உண்மையானது, சத்தியமானது என நம்புவது. 2. அவர்களில் யாருடைய பெயரை நாம் அறிந்து உள்ளோமோ அந்த இறைத்தூதர்களை அவர்களின் பெயருடன் நம்புவது. 3. அவர்கள் பற்றிய செய்திகளில் நம்பகமானவற்றை உண்மைப்படுத்துவது. அவர்களில் இறுதித் தூதரான முஹம்மத்(ஸல்) அவர்களின் ஷரீஅத்

சட்டங்களின்படி செயல்படுவது. அதாவது இவர்கள் அனுப்பப்பட்ட பிறகு வேறு ஷரீஅத்தை - மார்க்கத்தை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான் எனும் அடிப்படையில் செயல்பட வேண்டும்.

### 5. இறுதி நாளை நம்புவது

இறுதி நாள் என்பது மறுமை நாளாகும். அந்நாளில் தான் அல்லாஹ் மனிதர்கள் அனைவரையும் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்புவான்- அவர்களிடம் கேள்வி கணக்கு கேட்டு நற்கூலி அல்லது தண்டனை வழங்குவதற்காக. இந்நாளை இறுதி நாள் என்று கூறுவதற்குக் காரணம் இந்நாளிற்குப் பிறகு வேறொரு நாள் இருக்காது. முடிவாக சொர்க்கவாசிகள் தத்தமது இடங்களில் மகிழ்ச்சியுடன் தங்குவார்கள். நரகவாசிகள் தத்தமது இடங்களில் வேதனையில் ஆழ்ந்து கிடப்பார்கள்.

இறுதி நாளை நம்புவதன் கருத்தாவது, அந்த நாள் வந்தே தீரும் என உறுதியாக நம்பி, அந்த நம்பிக்கை யின் தேட்டத்தின் பிரகாரம் செயல்படுவதாகும்.

இறுதி நாளை நம்புவதில் மூன்று விஷயங்கள் உள்ளன:

1. மரணித்தவர்களை உயிர்ப்பிப்பித்து எழுப்புவதை நம்புவது. அதாவது மரணித்துவிட்ட மனிதர்களை அல்லாஹ் உயிர்ப்பித்து எழுப்புவான். அப்போது அவர்கள் தம் மண்ணறைகளிலிருந்து பாதணிகள் இல்லாமலும் நிர்வாணமாகவும் விருத்தசேதனம் செய்யப்படாமலும் எழுந்து வருவார்கள்.

2. விசாரணையையும் கூலி கொடுக்கப்படுவதையும் நம்புவது. அதாவது அல்லாஹ் ஒவ்வொரு மனிதனிடமும் இவ்வுலகில் அவன் செய்த செயல் குறித்து விசாரணை செய்வான். பிறகு அதன் பேரில் நற்கூலியோ தண்டனையோ அவனுக்கு வழங்குவான். யார் அல்லாஹ்வை ஏற்று அவனுக்கு கட்டுப்பட்டு, நற்செயல்கள் செய்தாரோ அவருக்கு சொர்க்கம் உண்டு. அல்லாஹ்வை மறுத்து அவனுக்கு மாறு செய்தவருக்கு நரகம் உண்டு.

விசாரணையும் கூலி கொடுக்கப்படுவதும் விவேகத்தின் தேட்டமாகும். ஏனெனில் அல்லாஹ் வேதங்களை இறக்கியருளியதும் இறைத்தூதர்களை அனுப்பியதும மக்களுக்கு நன்மை, தீமைகளைத் தெளிவுபடுத்தியதும், மேலும் தன்னை வணங்கி வழிபடுவதை மக்களுக்குக் கடமையாக்கியதும் வீணுக்காக அல்லவே!

அல்லாஹ்வின் அடியார்களில் இறைவனை ஏற்றுக் கொண்டவர்களும் இருக்கிறார்கள். இறைவனை நிராகரித்தவர்களும் இருக்கிறார்கள். இவ்விருசாராரும் சம நிலையில் இருப்பது அல்லாஹ்வின் விவேகத்திற்கும் அவனது நீதிக்கும் ஏற்புடையது அல்ல. அதனால் தான் ஒரு சாரார் நரகத்திற்கும் மற்றொரு சாரார் சொர்க்கத்திற்கும் செல்கின்றனர். திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்: முஸ்லிம்களை குற்றவாளிகளைப் போல் ஆக்குவோமா? உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? எப்படிப்பட்ட முடிவை எடுக்கின்றீர்கள்? (68:35,36)

3. சொர்க்கம், நரகத்தை நம்புவது: இவ்விரண்டு இடங்களும் படைப்பினங்கள் சென்றடைய வேண்டிய நிரந்தர இடங்களாகும். சொர்க்கம் என்பது அருட் பேருகள் நிறைந்த ஓர் உலகம். பயபக்தியாளர்களான நம்பிக்கையாளர்களுக்காக அல்லாஹ் அதனை தயார் செய்து வைத்திருக்கிறான். என்னென்ன விஷயங்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என அல்லாஹ் அவர்களின் மீது கடமையாக்கினானோ அவற்றின் மீது அவர்கள் நம்பிக்கை கொண்டார்கள். அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் கட்டுப்பட்டு வாழ்ந்தார்கள். அல்லாஹ்வுக்கு வாய்மையாளர்களாகவும் அல்லாஹ்வின் தூதரைப் பின்பற்றியவர்களாகவும் திகழ்ந்தார்கள். சொர்க்த்தில் மக்கள் அவர்களது நற்செயல்களுக்கு ஏற்ப அந்தஸ்தில் ஏற்றத்தாழ்வு உடையவர்களாக இருப்பர்.

நரகம் என்பது வேதனைகள் நிறைந்ததோர் உலகமாகும். அநீதியாளர்களான இறைநிராகரிப்பாளர் களுக்காக அல்லாஹ் அதனை தயார் செய்துவைத் துள்ளான். அவர்கள் அல்லாஹ்வை நிராகரித்தார்கள். அவனுடைய தூதர்களுக்கு மாறு செய்தார்கள். நரகம் பல படித்தரங்கள் கொண்டது. நரகவாசிகள் தமது தீய செயல்களுக்கேற்ப வேதனையில் ஏற்றத் தாழ்வு உடையவர்களாக இருப்பர்.

## 6. விதியை நம்புவது

அதாவது நடந்ததையும் நடக்கப்போவதையும் நடக்கவிருப்பதையும் அல்லாஹ் நன்கறிவான். மேலும் அல்லாஹ் நாடியதே நடக்கும். அவன் நாடாதது நடக்கப்போவதில்லை. நிகழுபவை அனைத்தும் அல்லாஹ்வுக்குத் தெரியாமல் அவனது நாட்டமில்லாமல் நிகழுவதில்லை என ஒரு மனிதன் நம்புவதாகும்.

## இஸ்லாத்தில் இறைவழிபாடு

இஸ்லாத்தில் எந்த வழிபாடும் அல்லாஹ்வுக்காக என தூய்மையான எண்ணத்துடன் செய்தாலே ஒழிய ஏற்கப்பட மாட்டாது. மேலும் அந்த வழிபாடு முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்துக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். உதாரணமாக தொழுகை ஒரு வணக்கமாகும். இது அல்லாஹ்வுக்காகவே நிறை வேற்றப்பட வேண்டும். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காட்டிய வழிமுறையிலும் அமைய வேண்டும். இதற்குப் பல காரணங்கள் உள்ளன:

1. வணக்க வழிபாடுகளை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே செய்ய வேண்டும் என்று அல்லாஹ் கட்டளை யிட்டுள்ளான். அல்லாஹ்வுடன் வேறொருவரை- வேறொன்றை வணங்குவது அவனுக்கு இணைவைப் பதாகும். அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுடன் எதனையும் இணைவைக் காதீர்கள். (4:36)

2. சட்டங்கள் வகுத்தளிக்கும் அதிகாரத்தை அல்லாஹ் தனக்கே உரித்தாக்கிக் கொண்டான். அது அவனுக்குரிய உரிமையாகும். யாரேனும் அல்லாஹ் அங்கீகரித்த முறைகளை விட்டு விட்டு வேறொன்றை வணக்கமாக எடுத்துக் கொண்டால் இவ்வதிகாரத்தில் அல்லாஹ்வுக்கு இணைவைத்தவனாவான்.

3. அல்லாஹ் இந்த இறைமார்க்கத்தை நமக்கு பரிபூரணமாக்கி விட்டான். அப்படியிருக்க ஒருவன் சுயமாக ஒரு வணக்கத்தை உருவாக்கிக் கொண்டால் இறை மார்க்கத்தில் குறை இருப்பதாக அவன் சந்தேகிப்பதாக ஆகிவிடும்.

4. மனிதர்கள் தாம் விரும்பியதை தாம் விரும்பும் விதத்தில் வணக்கமாக ஆக்கிக் கொள்ளலாம் என்று இருந்தால் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வணக்கமும் வழிபாட்டுமுறையும் உருவாகியிருக்கும். காரணம் ஒவ்வொருவரின் ரசனையும் மாறுபட்டிருக்கிறதே!

## இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள்

அல்லாஹ் விதித்துள்ள இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் ஐந்தாகும்.

1. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மது நபி(ஸல்)அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என உறுதியாக நம்புவது.
2. தொழுகையை நிலைநாட்டுவது.
3. ஸகாத் கொடுப்பது.

4. ரமழானில் நோன்பு நோற்பது.
5. ஹஜ் செய்வது.

1. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மது நபி(ஸல்)அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என உறுதியாக நம்புவது: இதன் கருத்து என்னவெனில் அல்லாஹ் தான் வணக்கத்திற்கு உரிய இறைவன், அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை. மேலும் முஹம்மது நபி அவர்கள் தான் அல்லாஹ்விடமிருந்து அறிவிக்கப்படும் செய்தியை மக்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய தூதர் என நாவால் மொழிந்து வெளிப்படுத்தும் ஓர் உறுதியான நம்பிக்கையாகும். ஒருவரது இஸ்லாமிய நம்பிக்கையும் அவருடைய செயலும் அல்லாஹ்வுக்காக என தூய எண்ணத்துடனும் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றியும் அமைந் தால் மட்டுமே இறைவனால் ஏற்றுக் கொள்ளப்டும்.

லாஇலாஹ இல்லல்லாஹு - வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதன் கருத்து: திண்ணமாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் மட்டுமே என்று ஒரு மனிதன் உள்ளத்தால் நம்பி நாவால் மொழிவதாகும். இவ்வாறு மொழிந்தால் மட்டும் போதாது. மாறாக அந்த நம்பிக்கையின் தேட்டத்தின் பிரகாரம் அவன் செயல்பட்டாக வேண்டும். அதாவது அதை ஏற்று அல்லாஹ்வின் கட்டளைக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தாக வேண்டும்.

முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்- முஹம்மது நபி(ஸல்) அல்லாஹ்வின் தூதர் என்பதன் கருத்து: அவர்கள் ஏவிய ஏவல்களுக்குக் கட்டுப்படுவது, அவர்கள் அறிவித்த செய்திகளை உண்மைப்படுத்துவது, அவர்கள் விலக்கிய விலக்கல்களிலிருந்து தவிர்ந்து கொள்வது, இன்னும் அவர்கள் எதை மார்க்கமாக்கினார்களோ அதன் மூலம் அல்லாஹ்வை வணங்குவது ஆகியவையாகும்.

2. தொழுகையை நிலைநாட்டுவது: அதாவது இஸ்லாத்தில் ஒரு நாளைக்கு, கடமையாக்கப்பட்ட ஐவேளைத் தொழுகைகளை நிறைவேற்றுவது. அவை, பஜ்ர், ழுஹர், அஸர், மஃரிப், இஷா ஆகிய தொழுகை களாகும்.

3. ஸகாத் கொடுப்பது: செல்வத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவை ஏழைகள், தேவையுடையோர் போன்ற தகுதியுடையோருக்குத் தருவதாகும்.

ஸகாத்தின் பயன்களில் சில: கஞ்சத்தனத்திலிருந்து மனதைத் தூய்மைப்படுத்துதல், தேவையுடைய முஸ்லிம்களின் தேவையை நிறைவேற்றுதல், அவர்களுக் கிடையே அன்பைப் பரப்புதல், சுயநலம், பொறாமை யிலிருந்து விடுபடுதல், பணிவையும் இரக்கக் குணத்தை யும் பெறுதல், மற்றவர்களைப் பற்றியும் சிந்தித்தல் போன்றவையாகும்.

4. ரமழானில் நோன்பு நோற்பது: அதாவது ரமழான் மாதத்தின் பகற்காலங்களில் நோன்பை முறிக்கக் கூடியவற்றை தவிர்ப்பதன் மூலம் அல்லாஹ்வுக்கு

அடிபணிவதாகும். அதன்படி ஒரு முஸ்லிம் ரமழான் மாதம் முழுவதும் உண்ணுதல், பருகுதல், உடலுறவு கொள்தல் போன்ற நோன்பை முறிக்கக்கூடிய காரியங்களை பஜ்ர் உதயமானதிலிருந்து சூரியன் மறையும் வரை அல்லாஹ்வுக்காகச் செய்யும் வணக்கமாகக் கருதி விட்டு விடுவதாகும்.

நோன்பின் பயன்களில் சில: மனதைத் தூய்மைப் படுத்துதல், அல்லாஹ்வின் திருப்தியை நாடி பிரியமானவற்றை விட்டுவிடுவதற்கு மனதைப் பயிற்றுவித்தல், பொறுமைக்கும் துன்பங்களை சகித்துக் கொள்வதற்கும் மனதைப் பக்குவப்படுத்துதல், எந்தச் செயலையும் அல்லாஹ்வுக்காகவே எனச் செய்யும் மனத்தூய்மையை வளர்த்தல், நம்பிக்கையைப் பேணுதல், பிறரைப் பற்றி சிந்தித்தல், பொதுவாக உடல் ஆரோக்கியம் கிடைத்தல்.

5. கஅபா ஆலயத்தை ஹஜ் செய்தல்: ஹஜ்ஜுக்கு சென்று வர சக்தியுள்ளவர்கள் ஹஜ்ஜின் கிரியைகளை நிறைவேற்ற சங்கைமிகு கஅபா ஆலயத்தை நாடிச் செல்வதன் மூலம் அல்லாஹ்வுக்கு அடிபணிவதாகும்.

## இஸ்லாத்தின் தனிச் சிறப்புகள்

பொதுவாக மனித குலம் முழுவதற்காகவும் அல்லாஹ் தேர்ந்தெடுத்த மார்க்கம் இஸ்லாமாகும். இது எல்லா காலத்திற்கும் எல்லா இடத்திற்கும் பொருத்தமானது. இஸ்லாமிய மார்க்கம் எந்த நன்மையையும் எடுத்துச் செல்லாமலில்லை. எந்தத் தீமையையும் எச்சரிக்காமல் இல்லை. இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்று

அதனை தன் வாழ்வின் பல்வேறு விஷயங்களில் நடை முறைப்படுத்தாமல் மனிதன் நிம்மதியையும் நற்பாக்கியத்தையும் அடைய முடியாது.

ஏனைய மதங்களில் இல்லாத சிறப்பம்சங்களைக் கொண்டு இஸ்லாம் தனித்துவம் பெற்றிருப்பது அதன் மகத்துவத்தை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைகின்றது. இஸ்லாத்தின் தனித்துவத்தையும் இஸ்லாத்தின் பால் மக்களுக்கு இருக்கக்கூடிய பெரும் தேவையையும் நிரூபிக்கக்கூடிய இத்தைகைய சிறப்பம் சங்கள் வருமாறு:

1. இஸ்லாம் அல்லாஹ்விடமிருந்து வந்த மார்க்கம் ஆகும். தனது அடியார்களுக்கு எது பொருத்தமானது என்பதை அவனே மிக அறிந்தவன். அல்லாஹ் கூறுகிறான்: படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுட்பமானவன், நன்கறிந்தவன். (67:14)

2. அல்லாஹ் மனிதனின் ஆரம்பத்தையும் முடிவையும் அவன் படைக்கப்பட்டதன் நோக்கத்தையும் இவ்வுலக வாழ்க்கையில் அவன் செல்ல வேண்டிய பாதையையும் தெளிவுபடுத்தியுள்ளான். மேலும் மனிதன் தவிர்ந்து கொள்ள வேண்டிய அனைத்து விஷயங்களையும் விளக்கியுமுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள். அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும் பெண்களையும்

பல்கிப் பெருகச் செய்தான். (4:1)

இந்தப் பூமியிலிருந்தே உங்களைப் படைத்தோம். இதிலேயே உங்களை மீளச் செய்வோம். மற்றொரு தடவை இதிலிருந்தே உங்களை வெளிப்படுத்துவோம். (20:55) ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:56)

இன்றைய தினம் உங்கள் மார்க்கத்தை உங்களுக்காக நிறைவு செய்து விட்டேன். எனது அருளை உங்களுக்கு முழுமைப்படுத்தி விட்டேன். இஸ்லாத்தை உங்களுக்கான வாழ்கை நெறியாக பொருந்திக் கொண்டேன். (5:3)

3. இஸ்லாம் இயற்கை மார்க்கமாகும். எனவே இது இயற்கைக்கு முரணாக இருக்காது.

அல்லாஹ் கூறுகிறான்: இது அல்லாஹ்வின் இயற்கையான மார்க்கம். இதன் மீதே மனிதர்களை அல்லாஹ் அமைத்துள்ளான். (30:30)

4. இம்மார்க்கம் அறிவுக்கு முக்கியத்துவம் தருகிறது. சிந்திக்கத் தூண்டுகின்றது. அறியாமை, பிறரைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவது, ஆரோக்கியமாக சிந்திப்பதை விட்டும் அலட்சியமாக இருப்பது ஆகியவற்றை வெறுக்கிறது.

அல்லாஹ் கூறுகிறான்: அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? என்று கேட்பீராக! அறிவுடையோர் தான் நல்லறிவு பெறுவார்கள். (39:9)

வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும் இரவு, பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடைய மக்களுக்குப் பல சான்றுகள் உள்ளன. அவர்கள் நின்றும், அமர்ந்தும், படுத்த நிலையிலும் அல்லாஹ்வை நினைப்பார்கள். வானங்கள் மற்றும் பூமி படைக்கப் பட்டது குறித்து சிந்திப்பார்கள். “எங்கள் இறைவா! இதை நீ வீணாகப் படைக்கவில்லை. எனவே நரக வேதனையிலிருந்து எங்களைக் காப்பாயாக ” (என்று அவர்கள் கூறுவார்கள். ) (3:190,192)

5. இஸ்லாமிய மார்க்கம் என்பது கொள்கையும் ஷரீஅத் சட்டங்களும் கொண்டதாகும். அது தனது கொள்கையிலும் சட்டதிட்டங்களிலும் பரிபூரணமாகத் திகழ்கின்றது. அது வெறும் சிந்தனையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மார்க்கமல்ல. மாறாக அது எல்லா விதத்திலும் பரிபூரணமானதாகவும், சரியான கொள்கை களையும், விவேகமுள்ள பழக்கவழக்கங்களையும், அழகிய குணங்களையும் உள்ளடக்கியதாகவும் இருக்கின்றது. மேலும் அது தனி மனிதனும் சமுதாயமும் கடைபிடிப்பதற்கு ஏற்ற மார்க்கமாகும். அத்துடன் அது இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் மார்க்கமாகும்.

6. இஸ்லாமிய மார்க்கம் மனித உணர்வுகளை மதிக்கின்றது. அவற்றை நன்மை மற்றும் ஆக்கப்பூர்வமான வழிகளில் செலுத்துகின்றது.

7. எதிரி, நண்பன், தன்னவன், அந்நியன் என அனைவருக்கும் நீதியைக் கடைபிடிக்கும் மார்க்கம் இஸ்லாம். அல்லாஹ் கூறுகிறான்:

அல்லாஹ் நீதி செலுத்தும்படி ஏவுகிறான். (16:90)

பேசும்போது நீதியையே பேசுங்கள். அதனால் பாதிக்கப்படுபவர் உறவினராக இருந்தாலும் சரியே. (6:152) ஒரு சமுதாயத்தின் மீது உள்ள பகை நீங்கள் நீதியாக நடக்காமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத்திற்கு நெருக்கமானது. (5:8)

8. இஸ்லாம் உண்மையான சகோதரத்துவத்தைப் போதிக்கும் மார்க்கமாகும். இம்மார்க்கத்தில் முஸ்லிம்கள் அனைவரும் ஒருவர் மற்றவருக்குச் சகோதரராவார்கள். அவர்கள் இனத்தால், நிறத்தால் நாட்டால் வேறுபட்டிருந்தாலும் சரியே. மேலும் இங்கு இனத்தின் பெயரால், சாதியின் பெயரால் ஏற்றத்தாழ்வும் கிடையாது. இன, நிற, குல வெறியும் கிடையாது. ஆம்! ஏற்றத்தாழ்வு ஒன்று உண்டு என்று சொன்னால் அது இறையச்சத்தின் அடிப்படையில்தான் இருக்கும்.

அல்லாஹ் கூறுகிறான்: மனிதர்களே! உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களை கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் (இறைவனை) அதிகம் அஞ்சுவோரே அல்லாஹ்விடம் அதிகம் சிறந்தவர். (49:13)

9. இஸ்லாம் கல்வியை வலியுறுத்தும் மார்க்கமாகும். அது தன்னைப் பின்பற்றுபவர்களை கல்வி கற்கும்படி ஏவுகிறது. அதற்கு மகத்தான கூலி தருவதாக வாக்களிக்கின்றது.

அல்லாஹ் கூறுகிறான்: உங்களில் இறைநம்பிக்கை கொண்டோருக்கும் கல்வி வழங்கப்பட்டோருக்கும் அல்லாஹ் பல தகுதிகளை உயர்த்துவான். (58:11) அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? (39:9) நபி(ஸல்)கூறினார்கள்: கல்வியைத் தேடுவது அனைத்து முஸ்லிம்களின் மீதும் கடமையாகும். (இப்னுமாஜா-224)

10. தனிமனிதர்களானாலும் சரி சமுதாயமானாலும் சரி இஸ்லாத்தை ஏற்று அதைச் சரியாக நடைமுறைப் படுத்துபவர்களுக்கு அல்லாஹ் நற்பாக்கியத்தையும் கண்ணியத்தையும் வழங்கப் பொறுப்பேற்றுள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான்: உங்களில் எவர்கள் இறை நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தார்களோ அவர்களிடம் அல்லாஹ் வாக்குறுதி அளிக்கின்றான். என்னவெனில், அவர்களுக்கு முன் சென்றோருக்கு அதிகாரம் வழங்கியதைப் போன்று அவர்களுக்கும் பூமியில் அதிகாரம் வழங்குவான். அவர்களுக்காக அவன் பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை உறுதிப்படுத்தி வைப்பான். அவர்களின் அச்சத்திற்குப் பின்னர் பாதுகாப்பான நிலையை ஏற்படுத்துவான். அவர்கள் என்னையே வணங்குவார்கள். எனக்கு எதையும் இணை கற்பிக்க மாட்டார்கள். (24:55)

ஆணோ பெண்ணோ நம்பிக்கை கொண்டு நல்லறம் செய்தால் அவரை மகிச்சியான வாழ்க்கை வாழச் செய்வோம். அவர்கள் செய்து கொண்டிருந்த நல்லவற்றின் காரணமாக அவர்களுக்குரிய கூலியை அவர்களுக்கு வழங்குவோம். (16:97)

11. இஸ்லாம் அன்பு, பாசம், கருணை, ஒற்றுமை ஆகியவற்றைப் போதிக்கும் மார்க்கமாகும்.

ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதிலும், கருணை மற்றும் இரக்கம் காட்டுவதிலும் இறைநம்பிக்கையாளர் களின் உவமை ஓர் உடலைப் போன்றதாகும். உடலில் ஒரு உறுப்புக்கு துன்பம் ஏற்பட்டால் உடலின் மற்ற உறுப்புக்களும் உறங்காமல் காய்ச்சலால் (வாடி அதன் துன்பத்தில் பங்கு கொண்டு) துணை நிற்கின்றன என நபி(ஸல்) கூறியுள்ளார்கள். (புகாரி-6011, முஸ்லிம்-2586)

“இரக்கம் காட்டுபவர்களுக்கு அல்லாஹ் இரக்கம் காட்டுகிறான். பூமியில் உள்ளவர்களுக்கு இரக்கம் காட்டுங்கள், வானில் உள்ளவன் உங்களுக்கு இரக்கம் காட்டுவான்” என்பதும் நபிமொழி. (திர்மிதி-1924)

“தனக்கு விரும்புவதையே தன் சகோதரனுக்கும் விரும்பாதவரை உங்களில் யாரும் இறை நம்பிக்கை கொண்டவராக ஆகமாட்டார்.”(நபிமொழி),

நூல்: புகாரி-13, முஸ்லிம்-45

12. இஸ்லாம் என்பது மன உறுதி, விடாமுயற்சி ஆக்கப்பூர்வமான செயல் ஆகியவற்றைப் போதிக்கும் மார்க்கமாகும்.

"பலமிக்க முஃமின் பலவீனமான முஃமினை விட சிறந்தவனும் அல்லாஹ்வுக்குப் பிரியமானவனுமாவான். ஆனாலும் ஒவ்வொருவரிடமும் நன்மையுண்டு. உனக்கு பயனளிக்கும் செயல்களில் ஆர்வம் கொள். மேலும் அல்லாஹ்விடம் உதவி தேடு, இயலாமலாகிவிடாதே. உனக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், 'நான் இப்படி இப்படி செய்திருந்தால் அது வந்திருக்காதே' எனச் சொல்லாதே. மாறாக 'அல்லாஹ் விதித்தது நடந்திருக்கிறது. அவன் நாடியதைச் செய் துள்ளான்' எனச் சொல். ஏனெனில், 'இப்படிச் செய்திருந்தால்' எனும் நிபந்தனைச் சொல் ஷைத்தானின் செயல்பாட்டிற்கு வழி திறந்துவிடலாம்" என நபி(ஸல்) கூறினார்கள்.
(முஸ்லிம்-2764)

13. இஸ்லாம் முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட மார்க்கமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

"இது (இந்தக் குர்ஆன்) அல்லாஹ் அல்லாதவரிடம் இருந்து வந்திருக்குமானால் இதில் ஏராளமான முரண்பாடுகளை கண்டிருப்பார்கள்." (4:82)

14. இஸ்லாம் தெளிவான, இலகுவான, அனைவரும் புரிவதற்கு எளிதான மார்க்கமாகும்.

15. இஸ்லாம் ஒரு திறந்த மார்க்கமாகும். அதைப் படித்துத் தெரிந்து கொள்ள விரும்புவோருக்கும் அதில் இணைய விரும்புவோருக்கும் அதன் கதவுகள் மூடப்படுவதில்லை.

16. இஸ்லாம் நற்குணங்கள் மற்றும் நற்செயல்களின் பால் அழைக்கும் மார்க்கமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

பெருந்தன்மையை மேற்கொள்வீராக. நன்மையை ஏவுவீராக. அறிவீனர்களை அலட்சியம் செய்வீராக!(7:199)

நன்மையைக் கொண்டே (தீமையைத்) தடுப்பீராக. எவருக்கும் உமக்கும் பகை இருக்கிறதோ அவர் அப்போதே உற்ற நண்பராகிவிடுவார். (41:34)

பெரும்பாலும் மனிதர்களை சுவனத்தில் சேர்ப்பது எது? என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு இறையச்சமும் நற்குணமும் தான் என்று பதில் அளித்தார்கள். (திர்மிதி-2004)

இறைநம்பிக்கையாளர்களில் பரிபூரண நம்பிக்கை உடையவர்கள் அழகிய குணமுடையவர்களே! என்றும் நபி(ஸல்)கூறினார்கள். (அபூதாவூத்-4682, திர்மிதி-1162)

மக்களில் அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானவர் பிறருக்கு அதிகம் நன்மை செய்யக் கூடியவரே! செயல்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானது ஒரு முஸ்லிமுக்கு நீ கொடுக்கும் சந்தோஷம், அல்லது அவனத்து சிரமத்தை நீக்குவது, அல்லது அவனது கடனை அடைப்பது, அல்லது அவனது பசியைப் போக்குது. எனது சகோதர முஸ்லிமின் தேவையை நிறைவேற்றுவதற்காக நான் அவனுடன் செல்வது இந்தப் பள்ளியில் ஒரு மாதம் இஃதிகாஃப் இருப்பதை விடவும் எனக்கு மிக விருப்பமானதாகும். நபிமொழி (தப்ரானி, ஸில்ஸிலதுஸ் ஸஹீஹா-906)

17. இஸ்லாம் அறிவுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. அதனால் தான் மதுபானங்கள், போதைப் பொருட்கள் இன்னும் அறிவை மழுங்கடிக்கக்கூடிய அனைத்தையும் தடை செய்கிறது. இன்னும் ஒருவன் தன்னையே அழித்துக் கொள்வதையும் தடுக்கிறது.

அல்லாஹ் கூறுகிறான்: உங்களை நீங்களே கொன்று விடாதீர்கள். அல்லாஹ் உங்கள் மீது நிகரற்ற அன்பு உடையவனாக இருக்கிறான். (4:29)

18. இஸ்லாம் சொத்துக்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. எனவே தான் நாணயத்தை மேற்கொள்ளும் படி தூண்டுகிறது. நாணயமுள்ளவர்களைப் புகழ்ந்து பாராட்டுகின்றது. அவர்களுக்கு சிறந்த வாழ்க்கை கிடைப்பதுடன் அவர்கள் சொர்க்கம் செல்வார்கள் எனவும் வாக்களிக்கின்றது. மேலும் திருட்டை தடை செய்வதோடு திருடுபவனுக்கு இவ்வுலகிலும் மறுவுல கிலும் தண்டனை உண்டென எச்சரிக்கின்றது. அதனால் எவரும் பொருட்களைத் திருடுவதற்கோ மக்களை அச்சுறுத்துவதற்கோ துணிய மாட்டான்.

19. இஸ்லாம் உயிர்களுக்கு உத்தரவாதம் தருகிறது. அதனால் தான் கொலை செய்வதைத் தடை செய் திருக்கிறது. மட்டுமல்ல கொலை செய்தவனுக்கு மரண தண்டனையை விதிக்கிறது. மறுமையில் அவனுக்கு நிரந்தர நரகம் என எச்சரிக்கிறது. இதன் காரணமாகத் தான் இந்தச் சட்டத்தை அமுல்படுத்தும் முஸ்லிம் நாடுகளில் கொலைக் குற்றம் மிக மிகக் குறைவாகக்

காணப்படுகின்றது. தான் யாரையாவது கொலை செய்து விட்டால் தாமும் கொல்லப்படுவோம் என்பதை ஒரு மனிதன் அறிந்து கொண்டால் அவன் யாரையும் கொலை செய்யத் துணியமாட்டான். மேலும் இத்தகைய குற்றவாளிகளின் தீங்கை விட்டும் மக்கள் நிம்மதி அடைவர்.

20. இஸ்லாம் ஆரோக்கியத்தைப் பேணும் மார்க்கம்.

அல்லாஹ் கூறுகிறான்: உண்ணுங்கள், பருகுங்கள், வீண் விரையம் செய்யாதீர்கள். (7:31)

இவ்வசனம் குறித்து அறிஞர்கள் கூறுவதாவது: இவ்வசனம் மருத்துவ நுட்பங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும். எவ்வாறெனில் உண்பதிலும் பருகுவதிலும் நடுநிலையை மேற்கொள்வது ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் வழிகளில் மிக்க மேலானது.

இவ்வாறே ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காகவே இஸ்லாம் மதுவையும் போதைப்பொருட்களையும் தடை செய்துள்ளது. போதைப் பொருட்களில் ஆரோக்கியக் கேடு அதிகம் உள்ளதென்பது யாரும் அறியாததல்ல.

அதுபோலவே இஸ்லாம் விபச்சாரத்தையும் ஓரினச் சேர்க்கையையும் தடை செய்துள்ளது. இவ்விரண்டிலும் அநேக கேடுகள் இருப்பது வெளிப்படையானதே. அவற்றில் ஸிஃபிலிஸ்(Syphilis), வினேரியல் (Venereal), ஹார்பஸ், எய்ட்ஸ் போன்ற ஆரோக்கியக் கேடுகளும் அடங்கும்.

21. இஸ்லாம் மனிதனுக்கு சுதந்திரத்தை வழங்கு கிறது. அதே நேரத்தில் அதைக் கட்டுப்படுத்தவும் செய் கிறது. அதன்படி இஸ்லாத்தில் மனிதன் கொடுக்கல் வாங்கல், வியாபாரம், பயணம் செய்தல் போன்றவற்றில் சுதந்திரம் உள்ளவனாவான். ஆனாலும் ஏமாற்றுவது, மோசடி செய்வது, குழப்பம் விளைவிப்பது என இறைவனின் வரைமுறையை மீறா வண்ணம் இருக்க வேண்டும்.

மேலும் இஸ்லாமிய மார்க்கத்தில் உணவுகள், பானங்கள், நறுமணப் பொருட்கள், ஆடைகள் போன்ற இவ்வுலக வாழ்வின் இன்பப் பொருட்களை அனுபவிப்பதற்கு மனிதன் சுதந்திரம் பெற்றுள்ளான். இச்சுதந்திரம் விலக்கப்பட்டதை அவன் செய்யாத வரை தான். காரணம் அதன் தீங்கு அவனுக்கோ அல்லது பிறருக்கோ பாதிப்பை ஏற்படுத்திவிடக் கூடாது.

## இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள்

இவ்வுலகில் மனிதனுக்குத் தேவையான, இன்னும் அவனுடைய ஈருலக நற்பாக்கியத்திற்கு காரணமாக உள்ள அனைத்தையும் போதிப்பதற்காகவே இஸ்லாம் வந்துள்ளது. இஸ்லாத்தினுடைய ஏவல் விலக்கல்களை நாம் பார்க்கின்றபோது அதன் சிறப்பம்சங்கள் நமக்குத் தெளிவாகின்றன.

## இஸ்லாத்தின் கட்டளைகள்

1. தன்னை விடவும் கீழ்நிலையிலுள்ள மிருகங்களுக்கு ஒப்பாவதிலிருந்து தன்னைக் காப்பாற்றி உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்கின்ற கட்டளைகளைத் தான் மனிதனுக்கு இஸ்லாம் விதித்திருக்கிறது. இதன் மூலம் மன இச்சைகளுக்கு அடிமையாகும் நிலையை விட்டும் உயர்ந்தவனாக அவன் ஆகிறான். பிற படைப்புகளை (கடவுள் போல்) கண்ணியப்படுத்தும் நிலையை விட்டும் அல்லது தன் இறைவனல்லாத பிறவற்றிற்கு முன் சிரம் பணியும் நிலையை விட்டும் உயர் அந்தஸ்து பெற்றவனாக அவன் வாழ்வான்.

2. மனிதன் தன் அறிவையும் தன் உறுப்புகளையும் அவை படைக்கப்பட்ட நோக்கத்திற்காகவே பயன்படுத்துமாறு இஸ்லாம் ஏவுகிறது. அதாவது இவ்வுலகத்திற்கும் மறுவுலகத்திற்கும் பயன்தரக்கூடிய காரியங்களில் பயன்படுத்துமாறு ஏவுகிறது.

3. இஸ்லாம் வணக்க வழிபாடுகளை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்குமாறும் பொய்யான ஏனைய கடவுள்களைக் கைவிடுமாறும் ஏவுகிறது.

4. இஸ்லாம் மக்களுடைய தேவையை நிறைவேற்றுமாறும் அவர்களுக்கு உதவி செய்யுமாறும் ஏவுகிறது.

5. இஸ்லாம் நோயாளிகளை விசாரித்தல், ஜனாஸாவில்- இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளுதல், அடக்கஸ்தலங்களுக்குச் சென்று முஸ்லிம்களுக்காகப் பிரார்த்தித்தல் ஆகியவற்றை ஏவுகிறது.

6. இஸ்லாம் மக்களுக்கு நீதி செலுத்துமாறும், அநீதியிழைக்கக் கூடாதென்றும், ஒருவன் தனக்கு விரும்புவதையே பிறமக்களுக்கும் விரும்ப வேண்டும் என்றும் ஏவுகிறது.

7. இஸ்லாம், வாழ்வாதாரத்தைத் தேடுவதற்கு மனிதன் உழைக்குமாறும், அதே நேரத்தில் அவன் சுயமரியாதையை கடைபிடிக்க வேண்டுமென்றும், இழிவை விட்டும் பிறரிடம் கையேந்துவதை விட்டும் தன் சுயமரியாதையை காத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஏவுகிறது.

8. இஸ்லாம் மனிதர்களுக்கு இரக்கம் காட்டுவதையும், கருணை காட்டுவதையும், அவர்கள் மீது அக்கறை கொள்வதையும், பயனுள்ள காரியங்களில் அவர்ளுக்கு உதவுவதையும், அவர்களை விட்டும் தீமைகளைத் தடுப்பதையும் ஏவுகிறது.

9. இஸ்லாம் பெற்றோரிடம் நல்லவிதமாக நடந்து கொள்ளுமாறும், உறவினர்களுடன் இணைந்து வாழுமாறும், அண்டை வீட்டாரிடம் கண்ணியமாக நடந்து கொள்ளுமாறும் உயிரினங்களிடம் மென்மையாக நடந்து கொள்ளுமாறும் ஏவுகிறது.

10. இஸ்லாம் ஒப்பந்தங்களை நிறைவேற்றுமாறும் மனைவி மக்களுடன் நல்லவிதமக நடந்து கொள்ளுமாறும் ஏவுகிறது.

11. இஸ்லாம் நம்பிக்கை, நாணயம், வாக்குறுதியை நிறைவேற்றுதல், நல்லெண்ணம், காரியங்களில்

மென்மையான போக்கை மேற்கொள்ளல், நன்மை செய்வதில் விரைதல் ஆகியவற்றையும் ஏவுகிறது. இன்னும் இதுபோன்ற அழகிய மகத்தான கட்டளை களையும் இஸ்லாம் வழங்கியுள்ளது.

## இஸ்லாத்தின் விலக்கல்கள்

இஸ்லாத்தினுடைய மகத்தான சிறப்பம்சங்களில் இஸ்லாம் விலக்கிய விலக்கல்களும் ஒன்றாகும். அனைவரும் பாதுகாப்பான, அமைதியான சமூகத்தில் வாழ வேண்டும் என்பதற்காக இவை முஸ்லிமை தீமையில் வீழ்வதை விட்டும் விலக்குகின்றன. தீய செயல்களால் விளையக்கூடிய தீய முடிவைக் குறித்து எச்சரிக்கின்றன.

இஸ்லாம் விலக்கிய விலக்கல்களில் சில வருமாறு:

1. இஸ்லாம் இறைநிராகரிப்பையும் இணை வைப்பையும் தடுக்கிறது.

2. தற்பெருமை, குரோதம், ஆணவம், பொறாமை, பிறரின் துன்பத்தில் இன்பம் காண்பது ஆகியவற்றைத் தடுக்கிறது.

3. தீய எண்ணம் கொள்வது, சகுணம் பார்ப்பது, நிராசை, கஞ்சத்தனம், வீண் விரையம் ஆகியவற்றைத் தடுக்கிறது.

4. சோம்பேறித்தனம், கோழைத்தனம், பலவீனம், வேலையின்றி முடங்கிக் கிடத்தல், அவசரப்படுதல், கடினமான போக்கு, வெட்கமின்மை, பொறுமை

இழத்தல், இயலாமை, கோபம், மூர்க்கத்தனம், ஏதேனும் கிடைக்காமல் போனதற்காக வருந்துதல் ஆகியவற்றைத் தடுக்கிறது.

5. பிடிவாதத்தையும் பாதிக்கப்பட்டோருக்கும் நிர்ப்பந்தத்திற்குள்ளானோருக்கும் உதவுவதைத் தடுக்கக்கூடிய வன்னெஞ்சத்தையும் தடுக்கிறது.

6. புறம் பேசுவதையும் கோள் சொல்லுவதையும் தடுக்கிறது. புறம் பேசுதல் என்பது ஒரு மனிதனைப் பற்றி அவன் விரும்பாததைப் பேசுவதாகும். கோள் சொல்லுதல் என்பது குழப்பம் விளைவிப்பதற்காக ஒருவரைப் பற்றிய செய்தியை மக்களுக்கு மத்தியில் பரப்புவதாகும்.

7. பயனில்லாமல் அதிகம் பேசுவது, இரகசியத்தைப் பரப்புவது, மனிதர்களைப் பரிகாசம் செய்வது, அடுத்தவர் களைக் கேலி செய்வது ஆகியவற்றைத் தடுக்கிறது.

8. திட்டுதல், சபித்தல், ஏசுதல், பட்டப் பெயர் சூட்டி அழைத்தல் ஆகியவற்றைத் தடுக்கிறது.

9. அதிகம் தர்க்கிப்பதையும் விதண்டாவாதம் புரிவதையும் தீமையின் பால் இட்டுச் செல்லக் கூடிய கீழ்த்தரமான கேலியையும் தடுக்கிறது.

10. சாட்சியத்தை மறைத்தல், பொய் சாட்சி சொல்லுதல், கற்புள்ள பெண்களின் மீது அவதூறு கூறுதல், இறந்தவர்களைத் திட்டுதல், கல்வியை மறைத்தல் ஆகியவற்றையும் தடுக்கிறது.

11. மடமை, ஆபாசம், செய்த தர்மத்தை சொல்லிக் காட்டுதல், நன்மை செய்தவருக்கு நன்றி மறத்தல் ஆகியவற்றையும் தடுக்கிறது.

12. மோசடி, சதி, வாக்கு மாறல் ஆகியவற்றையும் தடுக்கிறது.

13. பெற்றோரை நிந்தித்தல், உறவினர்களைத் துண்டித்தல், குழந்தைகளைப் பராமரிக்காது விட்டு விடுதல் ஆகியவற்றையும் தடுக்கிறது.

14. மக்களின் இரசியங்களையும் குறைகளையும் துருவித் துருவி ஆராய்வதைத் தடுக்கிறது.

15. ஆண்கள் பெண்களுக்கும் பெண்கள் ஆண் களுக்கும் ஒப்பாக நடப்பதைத் தடுக்கிறது.

16. மது அருந்துதல், போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், செல்வத்தை நாசமாக்கும் சூதாட்டம் ஆகியவற்றையும் தடுக்கிறது.

17. பொய் சத்தியம் செய்து பொருட்களை விற்பது, அளவு நிறுவையில் குறைவு செய்வது, விலக்கப்பட்ட வழியில் பொருட்களைச் செலவு செய்வது, அண்டை வீட்டாருக்குத் தொல்லை தருவது ஆகியவற்றையும் தடுக்கிறது.

18. திருடுதல், அபகரித்தல், பங்குதாரருக்கு துரோகம் செய்தல், வேலை முடிந்ததும் தொழிலாளிக்குக் கூலி தராமல் தாமதப்படுத்துதல் அல்லது கொடுக்காமல் இருத்தல் ஆகியவற்றையும் தடுக்கிறது.

19. அதிகம் உண்பதைத் தடுக்கிறது. அது உடலுக்குக் கேடு விளைவிக்கக்கூடியதாகும்.

20. ஒருவரையொருவர் வெறுப்பதையும் கோபித்துக் கொள்வதையும் புறக்கணிப்பதையும் ஒரு முஸ்லிம் தன் சகோதர முஸ்லிமுடன் மூன்று நாட்களுக்கு மேல் பேசாமலிருப்பதையும் தடுக்கிறது.

21. சட்டரீதியான தக்க காரணமின்றி ஒருவரை அடிப்பதையும் ஆயுதத்தால் மக்களை அச்சுறுத்து வதையும் தடுக்கிறது.

22. விபச்சாரம், ஓரினச் சேர்க்கை, கொலை ஆகியவற்றைத் தடுக்கிறது.

23. லஞ்சம் கொடுப்பதையும் வாங்குவதையும் தடுக்கிறது.

24. அநீதியிழைக்கப்பட்வருக்கு உதவி செய்ய சக்தியிருந்தும் உதவாமலிருப்பதைத் தடுக்கிறது.

25. பிறருடைய வீட்டில் அனுமதியில்லாமல் எட்டிப் பார்ப்பதையும், மற்றவர்களின் பேச்சுக்களை- அவர்கள் விரும்பாத நிலையில் செவிதாழ்த்த முயற்சிப்பதையும் தடுக்கிறது. இவையனைத்தும் இஸ்லாம் விலக்கிய தீமைகள் பற்றிய சுருக்கமாகும்.

## இறுதி நாளின் சட்டங்கள்

இறுதி நாளையும் அது தொடர்பான விஷயங்களையும் அங்கு நடக்கப்போவதையும் ஒரு மனிதன் நம்பாத வரை அவன் இறைநம்பிக்கையாளனாக ஆக முடியாது.

(இறுதி நாள், மறுமை நாள், தீர்ப்பு நாள், யுக முடிவு நாள்,மறுமை,மறு உலகம் என இதற்குப் பல பெயர்கள்.)

இறுதி நாள் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

(ஏக இறைவனை) நீங்கள் மறுத்தால் குழந்தைகளை நரைத்தோராக மாற்றும் நாளில் எவ்வாறு தப்பிப்பீர்கள்? (73:17)

இறுதி நாள் தொடர்பான விஷயங்கள் வருமாறு:

## மரணம்

மரணம் என்பது இவ்வுலகில் உயிர் வாழும் ஒவ்வொருவருக்கும் இறுதிக் கட்டமாகும். அல்லாஹ் கூறுகிறான்: ஒவ்வொருவரும் மரணத்தைச் சுவைப்பவரே! (3:185) இதில்(பூமியில்)உள்ள அனைவரும் அழிபவர்களே. (55:26) நபி(ஸல்) அவர்களை நோக்கி அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) நீர் இறப்பவரே! அவர்களும் இறப்போரே!(39:30)

இவ்வுலகத்தில் எந்த மனிதருக்கும் நிரந்தரம் கிடையாது. அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) உமக்கு முன் எந்த மனிதருக்கும் நாம் நிரந்தரத்தை ஏற்படுத்த வில்லை. (21:34)

1. மரணம் என்பது சந்தேகத்திற்கு வழியில்லாத உறுதியான விஷயமாகும். பிறகு மரணித்து விட்டவன் தனது மண்ணறைக்கு எந்தப் பொருளையும் எடுத்துச் செல்வதில்லை. நிச்சயமாக அவனுடன் தங்கியிருப்பது அவனுடைய செயல்கள் மட்டுமே.

2. மனிதனுடைய வாழ்நாள் பற்றிய விஷயம் மறைவானதாகும். அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அதனை அறிய முடியாது. எனவே யார் எப்போது எந்த இடத்தில் மரணமடைவார் என்பதை யாரும் அறிய முடியாது. திண்ணமாக இது அல்லாஹ்வுக்கு மட்டுமே தெரிந்த மறைவான ஞானங்களுள் ஒன்றாகும்.

3. மரணம் வந்து விட்டால் அதைத் தடுக்கவோ பிற்படுத்தவோ அதை விட்டும் வெருண்டோடவோ முடியாது.

அல்லாஹ் கூறுகிறான்: ஒவ்வொரு சமுதாயத்துக்கும் கெடு உண்டு. அவர்களின் கெடு வரும்போது சிறிது நேரம் அவர்கள் பிந்தவும் மாட்டார்கள், முந்தவும் மாட்டார்கள். (7:34)

4. (ஏக இறைவனை நம்புகின்ற) ஒரு முஃமினுக்கு மரணம் வந்துவிட்டால் நறுமணம் வீசுகின்ற அழகிய தோற்றத்துடன் மலக்குல் மௌத்- எனும் உயிரைக் கைப்பற்றும் வானவர் அவனிடம் வருவார். அவருடன் அருளுக்குரிய வானவர்களும் வருவார்கள். அவர்கள் அவனுக்கு சொர்க்கம் குறித்து நற்செய்தி கூறுவார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: எங்கள் இறைவன் அல்லாஹ் தான் என்று கூறி பின்னர் உறுதியாகவும் இருந்தோரிடம் வானவர்கள் இறங்கி, 'அஞ்சாதீர்கள், கவலைப்படா தீர்கள், உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவனம் குறித்து மகிழ்ச்சியடையுங்கள்.' எனக் கூறுவார்கள். (41:30)

ஆனால் (ஏக இறைவனை மறுக்கின்ற) காஃபிருக்கு மரணம் வந்தால் நாற்றமுள்ள கருநிற முகமுடைய, அச்சுறுத்தும் தோற்றமுள்ள வானவர் வருவார். வேதனைக்குரிய வானவர்களும் அவருடன் வருவார்கள். அவனுக்கு வேதனை குறித்து அவர்கள் எச்சரிப்பார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: அநியாயக்காரர்கள் மரண வேதனைகளில் இருக்கும் போது நீங்கள் அவர்களைப் பார்த்தால், வானவர்கள் தம் கைகளை நீட்டி உங்கள் உயிர்களை வெளியேற்றுங்கள். இன்று இழிவு தரும் வேதனை உங்களுக்கு கூலியாக வழங்கப்படும். ஏனெனில் நீங்கள் அல்லாஹ்வின் மீது உண்மைக்குப் புறம்பானதைக் கூறிக்கொண்டிருந்தீர்கள். இன்னும் அவனுடைய வசனங்களை (ஏற்பதை) விட்டும் பெருமை அடித்துக் கொண்டிருந்தீர்கள் (எனக் கூறுவார்கள்). (6:93)

எனவே மரணம் வந்து விட்டால் உண்மை நிலை வெளிப்பட்டு விடும். எல்லா மனிதர்களுக்கும் அவர்களது விஷயம் தெளிவாகிவிடும். அல்லாஹ் கூறுகிறான்:

முடிவில் அவர்களில் யாருக்கேனும் மரணம் வரும் போது, 'என் இறைவனே! நான் விட்டு வந்ததில் நல்லறம் செய்வதற்காக என்னைத் திருப்பி அனுப்புங்கள்!' என்று கூறுவான். அவ்வாறில்லை! இது அவன் கூறும் (வாய்) வார்த்தை தான். அவர்கள் எழுப்பப்படும் நாள் வரை அவர்களுக்குப் பின்னால் திரை உள்ளது. (23:99,100)

எனவே மரணம் வந்து விட்டால் இறைநிராகரிப்பாளனும் பாவியும் நல்லறங்கள் செய்வதற்காக

உலகத்திற்குத் திரும்ப வருவதை விரும்புவார்கள். எனினும் நேரம் தவறிவிட்ட பின் கைசேதப்படுவது எந்தப் பலனும் அளிக்காது.

அல்லாஹ் கூறுகிறான்: அநியாயக்காரர்கள் வேதனையைக் காணும் போது 'தப்பிக்க ஏதும் வழி உண்டா?' எனக் கூறுவதை நீர் காண்பீர். (42:44)

## மண்ணறை

நபி(ஸல்) கூறினார்கள்: மனிதன் மண்ணறையில் வைக்கப்பட்டு அவனுடைய நண்பர்கள் அவனை விட்டும் திரும்பிச் செல்லும்போது அவன் அவர்களின் செருப்பின் ஓசையைக் கேட்பான். இரு மலக்குகள் அவனை உட்காரவைத்து (ஒரு மனிதரைக் காண்பித்து) இம் மனிதரைப்பற்றி நீ என்ன கூறிக்கொண்டிருந்தாய்? என அவனிடம் கேட்பார்கள். ஒரு முஃமின் (ஏக இறைவனை நம்பியவன்), இவர் அல்லாஹ்வின் அடியாரும் அவனின் திருத்தூதருமாவார் என நான் சாட்சி கூறினேன் என்று கூறுவான். நரகத்தில் உனது இருப்பிடத்தைப் பார். இதற்குப் பகரமாக சுவர்க்கத்தில் ஒரு இருப்பிடத்தை அல்லாஹ் உனக்கு ஏற்படுத்தி விட்டான் என அவனிடம் கூறப்படும். அவ்விரண்டையும் அவன் பார்ப்பான்.

ஒரு காஃபிர் (ஏக இறைவனை மறுத்தவன்) அல்லது நயவஞ்சகனிடம் இம்மனிதரைப்பற்றி நீ என்ன கூறிக் கொண்டிருந்தாய்? எனக் கேட்கப்படும். அதற்கவன், எனக்குத் தெரியாது, மக்கள் கூறியதைக் கூறிக்கொண் டிருந்தேன் எனக் கூறுவான். அப்போது அவனிடம் நீ

அவரை அறிந்து கொள்ளவுமில்லை, பின்பற்றவுமில்லை எனக் கூறப்படும். பிறகு அவன் மீது இரும்புச் சம்மட்டியால் ஓங்கி அடிக்கப்படும். அப்போது அவன் அலறுவான். அதை மனிதர்களையும் ஜின்களையும் தவிர அனைவரும் கேட்பார்கள். (புகாரி-1374, நஸயீ-2024)

மேலும் மண்ணறை அவனை நெருக்கும். நரகத்தில் உள்ள அவனது இருப்பிடம் அவனுக்குக் காட்டப்படும். அதன் அனல் காற்றும் வேதனையும் அவனிடம் வரும்.

மண்ணறையில் உடலுக்கு மீண்டும் உயிர் கொடுக்கப்படும் என்பது உலகில் மனித அறிவுக்கு எட்டாத மறுமை விஷயமாகும். மனிதன் (ஏக இறைவனை) நம்பிக்கை கொண்டவனாக, நற்பாக்கியத்திற்குத் தகுதி யானவனாக இருந்தால் மண்ணறையில் அவனுக்கு நற்பாக்கியம் வழங்கப்படும். வேதனைக்குத் தகுதி யானவனாக இருந்தால் வேதனை செய்யப்படுவான்.

'மண்ணறை வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுங்கள்' என்பது நபிமொழி.
(முஸ்லிம்-2867)

சீரான அறிவு மண்ணறை வேதனையை மறுக்காது. காரணம் இதுபோன்ற நிலையை மனிதன் இவ்வுலக வாழ்வில் உணரத்தான் செய்கிறான். உதாரணமாக தூங்கக்கூடிய ஒருவன் கனவில் கடும் வேதனை செய்யப்படுவதாக உணர்ந்து சப்தமிடுகிறான், உதவி தேடி அழைக்கிறான். ஆனால் அவனுக்கு அருகில் இருப்பவன் இதை உணர்வதில்லை. ஆனாலும் மரணத்

திற்குப் பின்பு நடைபெறும் நிகழ்வுகளுக்கும் உலகில் உயிரோடு இருக்கும்போது நிகழும் விஷயங்களுக்கும் இடையில் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது.

மண்ணறை மறுமையின் நிலைகளில் முதல் நிலை ஆகும். இதிலிருந்து ஒருவன் ஈடேற்றம் பெற்று விட்டால் இதற்குப் பிறகு உள்ளவை இதை விட எளிதானதாகும். இதிலிருந்து ஈடேற்றம் பெறாவிட்டால் இதற்குப் பின் உள்ளவை இதை விட மிகக் கடினமானதாகும் என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (திர்மிதி-2308)

மண்ணறை வேதனை என்று பெயர் சொல்லப்படு வதற்குரிய காரணம் பெரும்பாலும் மக்கள் மண்ணறையில் தான் அடக்கம் செய்யப்படுகிறார்கள். ஆனால் நீரில் மூழ்கியவர், நெருப்பில் எரிந்துபோனவர், மிருகங்களால் தின்னப்பட்டவர் போன்றவர்கள் பர்ஸக் எனும் திரை மறைவு உலகில் வேதனை செய்யப்படுவார்கள் அல்லது சுகம் அனுபவிப்பார்கள்.

மண்ணறை வேதனை பலவிதத்தில் ஏற்படும். இரும்பு சம்மட்டியால் அடித்தல், விலா எலும்புகள் ஒன்றோ டொன்று பின்னிப் பிணையும் அளவுக்கு நெருக்குதல், மண்ணறையில் இருள் நிரப்பப்படுதல், நெருப்பாலான விரிப்பு விரிக்கப்படுதல், நரகிலிந்து ஒரு வாசல் திறந்து வைக்கப்படுதல், அவனுடைய தீய செயல்கள் துர்நாற்றம் உள்ள, அருவருப்பான முகமுடைய மனிதன் போன்று உருவெடுத்து அவனுடன் அமர்ந்திருத்தல் இப்படிப் பல விதத்தில் ஏற்படும்.

அடக்கம் செய்யப்பட்ட மனிதன் (ஏக இறைவனை) நம்பாதவனாகவோ, நயவஞ்சகனாகவோ இருந்தால் வேதனை நிரந்தரமாக இருக்கும். பாவம் செய்த இறை நம்பிக்கையாளனாக இருந்தால் அவன் செய்த பாவத்தின் அளவுக்கு பல்வேறு வேதனைகள் கொடுக்கப்படும். சிலசமயம் வேதனை நிறுத்தப்படும்.

ஆனால் நம்பிக்கையாளன், மண்ணறையில் அருள் பாலிக்கப்படுவான். அதாவது அவனது மண்ணறை விசாலமாக்கப்பட்டு ஒளி நிரப்பப்படும். சொர்க்கவாசல் திறக்கப்பட்டு அதன் வழியாக அதன் நறுமணம் வீசிக் கொண்டிருக்கும். சொர்க்கத்தின் விரிப்பு விரிக்கப்படும். அவனுடைய நற்செயல் அழகிய மனித வடிவில் உருவெடுத்து மண்ணறையில் அவனை மகிழ்விக்கும்.

## இறுதி நாள் ஏற்படுதல்

1. அல்லாஹ் இவ்வுலகத்தை நிரந்தரமாக இருப்பதற்காக படைக்கவில்லை. மாறாக அதற்கென ஒரு முடிவு நாள் வரும். அந்த நாள் தான் மறுமை நாளாகும். அது ஐயத்திற்கிட மில்லாத உண்மையும் ஆகும். அல்லாஹ் கூறுகிறான்:

அந்த நாள் வரக்கூடியதே! அதில் எந்தச் சந்தேகம் இல்லை. (40:59)

அந்த நாள் எங்களிடம் வராது என்று (ஏக இறைவனை) மறுப்போர் கூறுகின்றனர். அவ்வாறல்ல! என் இறைவன் மீது ஆணையாக! அது உங்களிடம் வரும் என்று கூறுவீரா! (34:3)

மறுமை நாள் பற்றிய அறிவு அல்லாஹ் தனக்கே சொந்தமாக்கிக் கொண்ட மறைவான விஷயங்களில் உள்ளதாகும். அவன் இவ்விஷயத்தை தன் படைப்பு களில் எவருக்கும் அறிவித்துக் கொடுக்கவில்லை.

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!)மறுமை நாள் பற்றி மக்கள் உம்மிடம் கேட்கின்றனர். அது பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது எனக் கூறுவீராக! அந்த நாள் சமீபத்தில் இருக்கக்கூடும் என்பது உமக்கு எப்படித் தெரியும்? (33:63)

2. இறுதி நாள் தீய மனிதர்கள் மீதே ஏற்படும். அதாவது இறுதி நாள் ஏற்படும் முன் (ஏக இறைவனை) நம்பிக்கை கொண்டோரின் உயிர்களைக் கைப்பற்றக் கூடிய தூய்மையான காற்றை அல்லாஹ் அனுப்பி வைப்பான். அதன் பின்னர் அல்லாஹ் எல்லாப் படைப் பினங்களையும் மரணிக்கச் செய்து இவ்வுலகத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நாடினால் சூர் ஊதும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட வானவரிடம் அதில் ஊதும்படி ஏவுவான். (சூர் என்பது பெரியதொரு எக்காளமாகும்.) மக்கள் அந்த சப்தத்தைக் கேட்ட வுடன் மூர்ச்சையாகி விடுவார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: சூர் ஊதப்படும். அப்போது அல்லாஹ் நாடியவர்களைத் தவிர வானம், பூமியிலுள்ள அனைவரும் மூர்ச்சையாவார்கள். (39:68)

இது வெள்ளிக்கிழமை அன்று ஏற்படும். அதன் பின்னர் வானவர்கள் அனைவரும் மரணித்து விடுவார்கள். அல்லாஹ்வைத் தவிர எவரும் இருக்க மாட்டார்கள்.

3. மனிதனுடைய உடலனைத்தும் அழிந்துவிடும். அவனுடைய முதுகந்தண்டின் கடைசியிலுள்ள ஒரு சிறு எலும்பைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பூமி தின்று விடும். எனினும் நபிமார்களின் உடல்களைப் பூமி தின்னாது. அல்லாஹ் வானிலிருந்து ஒரு தண்ணீரை இறக்கி வைப்பான். (அழிந்த) உடல்கள் வளர்ந்துவிடும்.

அல்லாஹ் மக்களை உயிர்ப்பித்து எழுப்ப நாடினால் சூர் ஊதும் பொறுப்பிற்குரிய வானவர் இஸ்ரா∴பீலை உயிர்ப்பிப்பான். அவர் இரண்டாம் முறை சூர் ஊதுவார். அல்லாஹ் எல்லாப் படைப்புகளையும் உயிர்ப்பிப்பான். மக்கள் தம் மண்ணறைகளிலிருந்து ஆரம்பமாக அல்லாஹ் அவர்களைப் படைத்தது போன்று செருப்பு அணியாதவர்களாக, நிர்வாணிகளாக, விருத்த சேதனம் செய்யப்படாதவர்களாக வெளிவருவார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: சூர் ஊதப்படும். உடனே அவர்கள் மண்ணறைகளிலிருந்து தமது இறைவனை நோக்கி விரைவார்கள். (36:51) முதலாவதாக பூமி பிளந்து வெளிப்படுபவர் முஹம்மது நபி அவர்கள் தாம்.

இதன் பின்னர் மக்கள் ஒன்று கூட்டப்படும் மைதானத்திற்கு கொண்டு வரப்படுவார்கள். அது பரந்த விசாலமான பூமியாகும். சூரியன் மக்களை நெருங்கி இருக்கும்.

ஒன்று கூட்டப்படும் மைதானத்தில் மக்கள் தம்மிடையே தீர்ப்பு செய்யப்படுவதையும் கேள்வி கணக்குக் கேட்கப்படுவதையும் எதிர்பார்த்து நெடிய காலம் காத்திருப்பார்கள். பிறகு அல்லாஹ் அவர்கள் இடையே தீர்ப்புச் செய்வதற்கு அனுமதியளிப்பான்.

அங்கு ஸிராத் என்னும் பாலம் அமைக்கப்படும். அது முடியை விட மெல்லியதாகவும் வாளை விட கூர்மையான தாகவுமிருக்கும். அது நரகத்தின் மீது அமைக்கப் பட்டிருக்கும். மக்கள் அதில் அவரவர் செயல்களைப் பொறுத்து கடந்து செல்வார்கள். சிலர் கண்சிமிட்டும் நேரத்திற்குள் கடந்து விடுவார்கள். சிலர் காற்று வேகத்தில் செல்வார்கள். வேறு சிலர் மிக விரைவாகச் செல்லும் குதிரை போன்றும் செல்வார்கள். இன்னும் தவழ்ந்து, தவழ்ந்து செல்பவர்களும் இருப்பார்கள். அப்பாலத்தில் இரும்புக் கொக்கிகள் இருக்கும். அவை மனிதர்களைப் பிடித்து நரகில் தள்ளிவிடும்.

(ஏக இறைவனை)மறுத்தவர்கள் நரகில் வீழ்வார்கள். நம்பிக்கை கொண்டவர்களில் அல்லாஹ் நாடிய சில பாவிகளும் நரகில் விழுவார்கள். (ஏக இறைவனை) மறுத்தவர்கள் நிரந்தரமாக நரகிலேயே கிடப்பார்கள். பாவிகளான நம்பிக்கையாளர்கள் அல்லாஹ் நாடிய அளவுக்கு வேதனை செய்யப்பட்டு பின் சொர்க்கம் செல்வார்கள்.

இப்பாலத்தை கடந்து செல்லும் சொர்க்கவாசிகள் சொர்க்கத்திற்கும், நரகத்திற்குமிடையே அமைக்கப்பட்

டிருக்கும் ஒரு பாலத்தில் நிற்பார்கள். அங்கு அவர்களுக்கிடையில் கணக்குத் தீர்க்கப்படும். யாரேனும் தன் சகோதரனுக்கு அநியாயம் செய்திருந்தால் அவரிடமிருந்து அந்தச் சகோதரருக்காகப் பழிக்குப்பழி வாங்கப்பட்டு, அவர்கள் பரஸ்பரம் திருப்தி அடையாத வரை சொர்க்கம் செல்ல முடியாது.

சொர்க்கவாசிகள் சுவர்க்கத்திலும் நரகவாசிகள் நரகத்திலும் நுழைந்து விட்டால் மரணம் ஒரு ஆட்டின் வடிவில் கொண்டு வரப்பட்டு சொர்க்கத்திற்கும் நரகத்திற்குமிடையே அறுக்கப்படும். சொர்க்கவாசிகளும் நரகவாசிகளும் அதைப் பார்ப்பார்கள். பிறகு சொர்க்கவாசிகளே! உங்களுக்கு மரணமே கிடையாது இதில் நீங்கள் நிரந்தரமாக இருங்களெனவும், நரகவாசிகளே! உங்களுக்கும் மரணமே கிடையாது இதிலேயே நீங்கள் நிரந்தரமாக இருங்களெனவும் கூறப்படும். மகிழ்ச்சியால் ஒருவருக்கு மரணம் ஏற்படும் என்றிருந்தால் சொர்க்கவாசிகள் தங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியால் மரணித்து விடுவார்கள். துயரத்தால் ஒருவருக்கு மரணம் ஏற்படும் என்றிருந்தால் நரகவாசிகள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள துயரத்தைக் கண்டு மரணித்து விடுவார்கள்.

## நரகமும் அதன் வேதனையும்

“(நரக)நெருப்புக்கு அஞ்சுங்கள்! (தீய) மனிதர்களும் கற்களுமே அதன் எரிபொருள். (ஏக இறைவனை) மறுப்போருக்காகவே அது தயாரிக்கப்பட்டுள்ளது” என அல்லாஹ் கூறுகிறான். (2:24)

நபி(ஸல்)அவர்கள் (தம் தோழர்களிடம்), "(நீங்கள் எரிக்கும்)உங்கள் நெருப்பு நரகின் நெருப்பில் எழுபது மடங்குகளில் ஒன்றாகும்" என்று கூறினார்கள். உடனே 'அல்லாஹ்வின் தூதரே! (பாவிகளைத் தண்டிக்க) இதுவே போதுமே' எனத் தோழர்கள் கூறினார்கள். அதற்கு நபி(ஸல்)அவர்கள், "(அவ்வாறல்ல)இந்த உலக நெருப்பை விட நரக நெருப்பு 69 மடங்குகள் அதிகப் படுத்தப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு மடங்கும் உலக நெருப்பின் வெப்பத்திற்குச் சமமானதாகும்" என்று கூறினார்கள். (புகாரி-3265, முஸ்லிம்-2843)

நரகம் ஏழு அடுக்குகளைக் கொண்டதாகும். அதில் ஒவ்வொரு அடுக்கும் மற்றதை விட மிகக் கடுமையான வேதனை உடையதாகும். அதன் ஒவ்வொரு அடுக்கிலும் அதற்குரியவர்கள் தங்கள் செயல்களுக்கேற்ப இருப்பார்கள்.

நயவஞ்சகர்கள் நரகத்தின் அடித்தட்டிலிருப்பார்கள். அதுதான் மிகக் கடுமையான வேதனைக்குரியதாகும். (ஏக இறைவனை) மறுத்தவர்களுக்கு நரகத்தில் வேதனை இடைவிடாமல் நிரந்தரமாக இருக்கும். அவர்கள் கரிந்து விடும்போதெல்லாம் வேதனையை அதிகப்படுத்துவதற்காக திரும்பவும் பழைய நிலைக்கு கொண்டு வரப்படுவார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: அவர்களின் தோல்கள் கருகும் போதெல்லாம் அவர்கள் வேதனையை சுவைப்பதற்காக வேறு தோல்களை அவர்களுக்கு மாற்றுவோம். (4:56)

(நம்மை) மறுத்தோருக்கு நரக நெருப்பு உள்ளது. அவர்கள் மரணிக்கும் வகையில் அவர்களின் கதை முடிக்கப்படவும் மாட்டாது. அதன் வேதனை அவர்க ளுக்கு குறைக்கப்படவும் மாட்டாது. (நம்மை) மறுக்கும் ஒவ்வொருவருக்கும் இவ்வாறே கூலி வழங்குவோம். (35:36)

அதில் அவர்கள் விலங்கிடப்படுவார்கள். அவர்களின் கழுத்துக்களிலும் விலங்கிடப்படும்.

அல்லாஹ் கூறுகிறான்: அந்நாளில் குற்றவாளிகள் சங்கிலிகளால் பிணைத்துக் கட்டப்பட்டிருப்பதை நீர் காண்பீர். அவர்களின் சட்டைகள் தாரினால் தயாரிக் கப்பட்டது. அவர்களின் முகங்களை நெருப்பு மூடிக் கொள்ளும். (14:49,50)

நரகவாசிகளின் உணவு ஸக்கூம் எனும் மரமாகும். அல்லாஹ் கூறுகிறான்: ஸக்கூம் எனும் மரம் பாவிகளின் உணவாகும். அது உருக்கிய செம்பு போன்றிருக்கும். அது கொதிக்க வைக்கப்பட்ட நீர் கொதிப்பதைப் போன்று வயிற்றில் கொதிக்கும். (44:43-46)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: ஸக்கூம் மரத்தில் இருந்து ஒரு துளி இவ்வுலகில் சிந்தப்பட்டால் இவ்வுல வாசிகளின் வாழ்க்கையையே அது சீரழித்து விடும். அப்படியானால் அதுவே உணவாக கொடுக்கப்படுபவர் களின் நிலை எப்படி இருக்கும்? (திர்மிதி-2585)

நரகத்தினுடைய வேதனையின் கடுமையையும் சொர்க்கத்திலுள்ள இன்பத்தின் பெருமையையும் பின்

வரும் நபிமொழி தெளிவுபடுத்துகிறது: உலகில் சுக போகமாக வாழ்ந்த, (ஏக இறைவனை) மறுத்தவர்களில் ஒருவன் மறுமையில் கொண்டு வரப்படுவான். அவன் நரக நெருப்பில் ஒரு முறை முக்கப்படுவான். பின்பு அவனிடம் உலகில் உனக்கு இன்பம் ஏதும் கிடைத்ததா? என வினவப்படும். அப்போது அவன் எனக்கு எந்த இன்பமும் கிடைத்தில்லையே எனக் கூறுவான். நரகத்தில் ஒரு தடவை முக்கியதால் உலகத்தினுடைய இன்பசுகங்கள் அனைத்தையும் அவன் மறந்துவிடுவான்.

இவ்வாறே உலகில் மிகவும் வறுமையிலும் கஷ்டத் திலும் வாழ்ந்த (ஏக இறைவனை) நம்பிக்கை கொண்ட வர்களில் ஒருவர் கொண்டு வரப்பட்டு ஒரே ஒரு தடவை சொர்க்கத்தில் புகுத்தி, பின்னர் (உலகத்தில்) உனக்கு ஏதேனும் துன்பமோ வறுமையோ ஏற்பட்டதுண்டா? என்று கேட்கப்படும். அதற்கு அவர் (உலகில்) எனக்கு துன்பமோ வறுமையோ ஏற்பட்டது கிடையாது எனக் கூறுவார். ஒரே ஒரு தடவை சொர்க்கத்தில் புகுத்தி யதால் உலகில் அவர் அனுபவித்த கஷ்டம், வறுமை, துர்ப்பாக்கியம் அனைத்தையும் மறந்துவிடுவார். (முஸ்லிம்)

## சொர்க்கம்

சொர்க்கம் இறைவனின் நல்லடியார்களுக்குரிய கண்ணியமான நிரந்தரமான உலகமாகும். அதிலுள்ள பாக்கியங்கள் எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனிதனின் உள்ளத்திலும் உதித்திராதவையாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: அவர்கள் செய்த (நற்) செயல்களுக்குக் கூலியாக கண்குளிரும் வகையில் அவர்களுக்காக மறைத்து வைக்கப்பட்டுள்ளதை எவரும் அறிய மாட்டார். (32:17)

சொர்க்கம் பல ஏற்றத்தாழ்வு உடைய பலதரப்பட்ட அந்தஸ்து படித்தரங்களைக் கொண்டதாகும். அவற்றில் (ஏக இறைவனை) நம்பிக்கை கொண்டவர்களின் தங்குமிடங்கள் அவரவரின் செயல்களைப் பொறுத்து அமையும்.

அல்லாஹ் கூறுகிறான்: உங்களில் நம்பிக்கை கொண்டோருக்கும் கல்வி வழங்கப்பட்டோருக்கும் அல்லாஹ் பல தகுதிகளை உயர்த்துவான். (58:11)

சொர்க்கத்தில் அவர்கள் விரும்பியவற்றை உண்ண வும் பருகவும் செய்வார்கள். அதில் மாற்றமடையாத நீராறுகளும், சுவை கெட்டுப்போகாத பாலாறுகளும், தூய்மையான தேனாறுகளும், அருந்துபவர்களுக்கு இன்பம் தரும் மது ஆறுகளும் இருக்கும். அவர்களின் மது உலகத்திலுள்ள மதுவைப் போன்று இருக்காது.

அல்லாஹ் கூறுகிறான்: ஓடுகின்ற மதுவிலிருந்து நிரம்பப் பெற்ற கிண்ணங்கள் அவர்களைச் சுற்றிக் கொண்டு வரப்படும். (அது) வெண்மையானதும் அருந்துவோருக்கு இன்பமானதுமாகும். அதில் எந்தக் கேடும் இல்லை. அதனால் அவர்களுக்கு போதையும் உண்டாகாது. (37:45, 46, 47)

(ஏக இறைவனை) நம்பிக்கை கொண்டவர்களுக்கு சொர்க்கத்தில் 'ஹூருல் ஈன்' எனும் பெண்கள் மண முடித்து வைக்கப்படுவார்கள். "சொர்க்கத்துப் பெண் களில் ஒருத்தி இப்பூமியில் உள்ளவர்களிடம் வந்தால் வானத்திற்கும், பூமிக்கும் இடைப்பட்ட பகுதிகளைப் பிரகாசிக்கச் செய்திடுவாள். அவற்றில் நறுமணம் வீசச் செய்வாள்" என நபி(ஸல்) கூறினார்கள். (புகாரி-2796)

சொர்க்கவாசிகளின் மிகப் பெரும் பாக்கியம் அல்லாஹ்வைப் பார்ப்பதாகும். சொர்க்கவாசிகள் மல ஜலம் கழிக்கவோ, மூக்குச் சிந்தவோ, உமிழவோ மாட்டார்கள். அவர்களின் சீப்புகள் தங்கமாகவும் வியர்வை கஸ்தூரியாகவும் இருக்கும். அவர்களின் இவ்வருட்பாக்கியம் முடிவுறாத, குறைந்திடாத நிரந்தர பாக்கியமாகும்.

சொர்க்கம் செல்பவர் இன்பம் அனுபவிப்பார். சிரமப்பட மாட்டார், நிரந்தரமாக வாழ்வார். சொர்க்கவாசிகளின் குறைந்த பாக்கியம் உலகத்திலுள்ள இன்பங்கள் அனைத்தும் பத்துமுறை வழங்கப்படுவதைவிடவும் சிறந்ததாகும் என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

## இஸ்லாத்தில் பெண்கள் நிலை

இஸ்லாத்தில் பெண்களுக்கிருக்கிற உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு முன் பெண்கள் குறித்து மற்ற சமூகத்தினரின் நிலைபாடு என்ன? அவர்களை எப்படி நடத்திக் கொண்டிருந்தார்கள் என்பதைத் தெளிவு படுத்துவது அவசியமாகும்.

கிரேக்கர்களிடத்தில் பெண்கள் வியாபாரப் பொருட் களாகவே கருதப்பட்டனர். அவர்களுக்கென்று எந்த உரிமையும் இருக்கவில்லை. உரிமைகள் அனைத்தும் ஆண்களுக்கே இந்தன. பெண்களுக்கு சொத்துரிமை, செல்வத்தை நிர்வகித்தல் போன்ற உரிமைகளும் தடுக்கப்பட்டிருந்தன. அவர்களில் பிரபல தத்துவஞானி சாக்ரடீஸ் என்பவர், "பெண்கள் இருப்பது உலகின் வீழ்ச்சிக்கு மிகப் பெரும் மூல காரணமாகும். மேலும் பெண்கள் விஷமரத்திற்கு ஒப்பானவர்கள். அம்மரத்தின் புறத் தோற்றம் அழகாக இருக்கும். எனினும் அதன் கனிகளை சிட்டுக்குருவிகள் தின்றவுடனேயே இறந்து விடும்" என்று கூறியுள்ளார்.

ரோமானியர்கள் பெண்களுக்கு "ஆன்மா" கிடையாது என்று கருதிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் பெண் களுக்கு எந்த மதிப்பும் உரிமையும் இருந்ததில்லை. "பெண்ணுக்கு ஆன்மா இல்லை" என்பது அவர்களின் கோசமாகிவிட்டிருந்தது. அதனால் தான் பெண்களை அவர்கள் மீது கொதிக்கின்ற எண்ணெயை ஊற்றியும், அவர்களைத் தூண்களில் கட்டியும் துன்புறுத்தி வந்தார்கள். அதுமட்டுமின்றி ஒரு குற்றமும் செய்யாத பெண்களை குதிரைகளின் வால்களில் கட்டி அவர்கள் மரணித்து போகின்ற அளவிற்கு குதிரைகளை மிக வேகமாக ஓட்டிவிடுவார்கள்.

பெண்கள் விஷயத்தில் இந்தியர்களின் கண்ணோட் டமும் இவ்வாறுதான் இருந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் அவர்கள் இன்னும் ஒருபடி மேல் சென்று

கணவன் இறந்துவிட்டால் உடன்கட்டை ஏறுதல் எனும் அடிப்படையில் அவனின் சிதையுடன் மனைவியை யும் எரித்துவிடுபவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

சீனர்கள் பெண்களை நற்பாக்கியத்தை அழித்து விடக்கூடிய தண்ணீருக்கு ஒப்பாக்கினர். அவர்கள் தம் மனைவியரை உயிரோடு புதைத்து விடுவதற்கும் விற்று விடுவதற்கும் உரிமை பெற்றிருந்தனர்.

பெண்கள் சாபத்திற்குரியவர்களென யூதர்கள் கருது கிறார்கள். ஏனெனில் அவள்தான் ஆதமை வழிகெடுத்து மரத்தைச் சாப்பிடச் செய்தாள். மேலும் பெண்ணுக்கு மாதவிடாய் வந்துவிட்டால் அவள் அசுத்தமானவள், அப்பெண்ணினால் வீடு, அவள் தொடும் பொருட்கள் எல்லாம் அசுத்தமாகி விடும் எனவும் கருதுகிறார்கள். பெண்ணுக்கு சகோதரர்களிருந்தால் அவள் தந்தையின் சொத்தில் அவளுக்கு சிறிதளவும் பங்கு கிடையாது எனவும் கருதுகிறார்கள்.

கிறிஸ்தவர்கள், பெண்களை ஷைத்தான் எனக் கருதுகிறார்கள். கிருஸ்தவ மத அறிஞர்களில் ஒருவர், “பெண் மனித இனத்தைச் சார்ந்தவளல்ல” எனக் கூறினார். புனித பூனபெஃன்தூரா என்பவர், “நீங்கள் பெண்ணைக் கண்டால் அவளை மனித இனத்தைச் சார்ந்தவள் எனக் கருதிவிடாதீர்கள். அதுமட்டுமல்ல அவளை வனாந்தர ஜீவனாகக் கூட கருதாதீர்கள். உண்மையில் நீங்கள் காண்பது சாத்தானின் உருவத் தைத் தான். நீங்கள் செவியேற்கும் அவளது சப்தம் பாம்பின் சீற்றமாகும்”

மேலும் கடந்த (19 ஆம்) நூற்றாண்டின் மத்திய காலம் வரை ஆங்கிலேய பொதுச் சட்டப்படி பெண்கள் குடி உரிமை வழங்கப்படாதவர்களாக இருந்தனர். இது போன்றே பெண்களுக்கென தனிப்பட்ட உரிமைகள் எதுவும் கிடையாது. அவள் அணியும் ஆடை உட்பட எந்தப் பொருளையும் சொந்தப்படுத்திக் கொள்ள அவளுக்கு உரிமை கிடையாது. 1567 ஆம் ஆண்டு ஸ்காட்லண்ட் நாடாளுமன்றம் பெண்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கக்கூடாதென சட்டம் இயற்றியது. இவ்வாறே எட்டாவது ஹென்றியின் காலத்தில் ஆங்கிலேயப் பாராளுமன்றம் பெண்கள் அசுத்தமான வர்கள் என்பதால் இன்ஜீலைப் படிக்கக் கூடாதென சட்டம் இயற்றியது.

பிரஞ்சுக்காரர்கள் 586 ஆம் ஆண்டில் பெண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்களா? இல்லையா? என்பதை ஆய்வு செய்வதற்காக ஒரு மாநாட்டைக் கூட்டினர். அதில் பெண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்கள் தான். எனினும் அவர்கள் ஆண்களுக்குப் பணிவிடை செய்வதற்காகவே படைக்கப்பட்டவர்கள் என்று முடிவு செய்தனர். 1805 ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயர்களின் சட்டம், ஒரு கணவன் தனது மனைவியை விற்பதற்கு அனுமதித்திருந்தது. மனைவியின் விலை ஆறு பெனி (அரை ஷிலிங்) என நிர்ணயமும் செய்யப்பட்டது.

(பெனி, ஷிலிங் Penny, Schilling என்பது ஆங்கிலேய நாணயத்தின் பெயர்கள்)

இஸ்லாம் வருவதற்கு முன்பு வரை அரேபியர்கள் பெண்களை இழிந்த பிறவிகளாகக் கருதி வந்தனர். அவளுக்கு சொத்துரிமை கிடையாது. அவர்கள் ஒரு பொருட்டாகவே கருதப்பட மாட்டார்கள். அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. சொல்லப்போனால் அவர்களில் பெரும்பாலோர் தமது பெண் குழந்தை களை உயிருடன் புதைத்து வந்தனர்.

பிறகு பெண்களை விட்டும் இக்கொடுமைகளைத் துடைத் தெறிவதற்காகவும் ஆண்களும் பெண்களும் சமமானவர்களே. ஆண்களுக்கு உரிமைகள் இருப்பது போலவே பெண்களுக்கும் உரிமைகள் இருக்கின்றன என்பதை விளக்குவதற்காகவும் இஸ்லாம் வந்தது.

அல்லாஹ் கூறுகிறான்: மனிதர்களே! உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே நாம் படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் (இறைவனை) அதிகம் அஞ்சு வோரே அல்லாஹ்விடம் மிகச் சிறந்தவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன், சூழ்ந்தறிபவன். (49:13)

ஆண்களிலோ பெண்களிலோ நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்தோர் சொர்க்கத்தில் நுழைவார்கள். சிறிதளவும் அவர்கள் அநீதமிழைக்கப்பட மாட்டார்கள். (4:124)

தனது பெற்றோருக்கு நன்மை செய்ய வேண்டுமென மனிதனுக்கு நாம் அறிவுறுத்தியுள்ளோம். (46:15)

“நம்பிக்கை கொண்டோரில் பரிபூரண நம்பிக்கை உடையவர்கள் அழகிய குணம் உடையவர்களே. தனது மனைவியிடத்தில் சிறந்தவரே உங்களில் சிறந்தவர்” என நபி(ஸல்) கூறினார்கள். (திர்மிதி-1162)

‘மனிதர்களில் நான் அழகிய முறையில் நடந்து கொள்வதற்கு அதிக உரிமை படைத்தவர் யார்?’ என ஒருவர் நபி(ஸல்)அவர்களிடம் கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “உன் தாய்” எனக் கூறினார்கள். ‘பின்பு யார்?’ எனக் கேட்டார். நபி(ஸல்)அவர்கள், “உன் தாய்” எனக் கூறினார்கள். ‘அதன் பிறகு யார்?’ எனக் கேட்டார். “உன் தாய்” என்றே கூறினார்கள். ‘அதன் பிறகு யார்?’ எனக் கேட்கவும் நபி(ஸல்)அவர்கள், “உன் தந்தை” எனக் கூறினார்கள். (புகாரி-5971, முஸ்லிம்-2548)

இது பெண்கள் பற்றிய இஸ்லாத்தின் சுருக்கமான கண்ணோட்டமாகும்.

## பெண்களுக்குரிய பொதுவான உரிமைகள்

இஸ்லாத்தில் பெண்களுக்கு பொதுவான சில உரிமைகள் உள்ளன. அவை வருமாறு:

**1. தனக்குச் சொந்தமாக்கும் உரிமை:** வீடுகள், விளை நிலங்கள், தொழிலகங்கள், தோட்டங்கள், வெள்ளி, தங்கம், கால்நடை வகைகள் இவற்றில் விரும்பியவற்றை ஒரு பெண் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். அவள் தாயாக, மகளாக, சகோதரியாக எப்படி இருந்தாலும் சரியே.

**2. திருமணம் செய்யும் உரிமை:** கணவனைத் தேர்வு செய்வது, தனக்கு விருப்பமில்லாதவனை ஏற்க மறுப்பது, தனக்கு இடையூறு ஏற்பட்டால் விவாகரத்து செய்வது ஆகிய உரிமைகள் அவளுக்கு உள்ளன. இவை பெண்களுக்கு (நபிவழி மூலம்) நிரூபணமான உரிமைகளாகும்.

**3. கல்வி கற்கும் உரிமை:** அனைத்து வகையான கல்வியையும் கற்க அவளுக்கு உரிமையுண்டு. குறிப்பாக கடமையான கல்வியை கற்க அவளுக்கு உரிமை உள்ளது. உதாரணமாக அல்லாஹ்வை அறிவது, அவனுக்குச் செய்ய வேண்டிய வணக்கங்களையும் அதை நிறைவேற்றும் முறையையும் அறிவது. இன்னும் அவள் நிறைவேற்றக் கடமைப்பட்ட உரிமைகளையும் அவளுக்குத் தேவையான ஒழுக்கங்களையும் அவள் கடைபிடிக்க வேண்டிய சிறந்த பண்பாடுகளையும் அறிவது. ஏனெனில் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் கல்வியைத் தேடுங்கள் என்று பொதுப்படையாகவே கூறியிருக்கிறார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதை நீ அறிந்துகொள். (47:19)

கல்வியைத் தேடுவது நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னுமாஜா)

**4. செலவு செய்யும் உரிமை:** அவளுடைய பொருளில் இருந்து அவள் விரும்பிய அளவு தர்மம் செய்வதற்கும்

அதிலிருந்து அவளுக்கும் அவள் விரும்பினால் அவளு டைய கணவன், பிள்ளைகள், அல்லது தாய்மார்கள் தந்தைமார்களுக்கும் வீண், விரயமில்லாத அளவுக்கு செலவு செய்வதற்கும் அவளுக்கு உரிமை உண்டு. இவ்விஷயத்தில் பெண்களும் ஆண்களைப் போன்று உரிமை பெறுகிறார்கள்.

**5. மரணசாசனம் செய்யும் உரிமை:** அவள் உயிருடன் இருக்கும்போது அவளுடைய சொத்தில் மூன்றில் ஒரு பாகம் மரணசாசனம் செய்வதற்கு அவளுக்கு உரிமை உண்டு. அவளது மரணத்திற்குப் பின்பு அவளுக்காக அந்த மரணசாசனம் எந்த ஆட்சேபணை இல்லாமல் செயல்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் மரணசாசனம் செய்வது மனிதனின் தனிப்பட்ட உரிமையாகும். இந்த உரிமை ஆண்களுக்கு இருப்பதுபோல் பெண்களுக்கும் உண்டு. ஆயினும் இவ்வாறு செய்யும் மரணசாசனம் மூன்றில் ஒரு பகுதியைத் தாண்டக் கூடாது. இதில் ஆண்களும் பெண்களும் சமமே.

**6. ஆடை அணியும் உரிமை:** பட்டு, தங்கம் ஆகிய இரண்டில் அவள் விரும்புவதை அணிந்து கொள்ள அவளுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இவ்விரண்டும் ஆண்களுக்கு விலக்கப்பட்டதாகும். ஆயினும் அந்நிய ஆடவருக்கு முன் அரை குறை ஆடையுடன் காட்சி தரக்கூடாது.

**7. அலங்காரம் செய்யும் உரிமை:** தன் கணவனுக்காக தன்னை அலங்கரித்துக் கொள்ள அவளுக்கு உரிமை

உள்ளது. அந்த வகையில் அவள் சுர்மா போட்டுக் கொள்ளலாம். அவள் விரும்பினால் இரு கன்னங்களிலும் உதடுகளிலும் சிகப்புச் சாயம் இட்டுக் கொள்ளலாம். அழகான ஆபரணங்களையும் அணிந்து கொள்ளலாம்.

**8. உண்ணப் பருகும் உரிமை:** நல்ல, சுவையான உணவுகளை உண்ணவும் அது போன்ற பானங்களை அருந்தவும் அவளுக்கு உரிமையுண்டு. உண்பதிலும் குடிப்பதிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மத்தியில் எந்தப் பாகுபாடுமில்லை. உணவிலும் பானத்திலும் எது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதோ அது ஆண் களுக்கும் அனுமதிக்கப்பட்டது தான், பெண்களுக்கும் அனுமதிக்கப்பட்டது தான். ஒன்று விலக்கப்பட்டது என்றால் அது ஆண்களுக்கும் விலக்கப்பட்டதே, பெண்களுக்கும் விலக்கப்பட்டதே.

அல்லாஹ் கூறுகிறான்: உண்ணுங்கள் பருகுங்கள் ஆனால் வீண் விரையம் செய்யாதீர்கள். வீண் விரையம் செய்வோரை அவன் நேசிப்பதில்லை. (7:31) இங்கு இரு பாலாரையும் நோக்கியே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**9. வாரிசு உரிமை:** அவள் ஒருவருக்கு வாரிசாக ஆவதற்கும் அவளுக்கு ஒருவர் வாரிசாக ஆவதற்கும் உரிமை உண்டு.

## கணவன் மீது மனைவிக்குரிய உரிமைகள்

பெண்களுக்கு குறிப்பிட்ட சில உரிமைகள் கடமைகள் இருக்கின்றன. அவை அவளுடைய கணவன் அவளுக்கு செய்யய வேண்டிய உரிமைகள், கடமைகள் ஆகும்.

இவ்வுரிமைகள், கடமைகள் தன் கணவனுக்கு அவள் செய்ய வேண்டிய குறிப்பிட்ட சில உரிமைகள் கடமைகளுக்குப் பகரமாகும். இதோ மனைவிக்கு கணவன் அவசியம் நிறைவேற்ற வேண்டிய சில உரிமைகள்:

அல்லாஹ் கூறுகிறான்: பெண்கள் மீது (ஆண்களுக்கு உள்ள) உரிமைகள் போல ஆண்கள் மீதும் (பெண்களுக்கு) உரிமைகள் சிறந்த முறையில் உள்ளன. (2:228)

இவற்றில் சிலவற்றை அவள் மன்னித்து விட்டாலான்றி கணவன் இவற்றை முழுமையாக மனைவிக்கு வழங்குவது கடமையாகும்.

1. அவன் தனது வசதி, வருவாயைப் பொருத்து அவளுக்குச் செலவு செய்ய வேண்டும். இச்செலவில் உணவு, பானம், உடை, உறைவிடம், மருத்துவம் ஆகியவை அடங்கும்.

2. அவளுடைய மானம், மரியாதை, உடல், பொருள், மார்க்கம் இவை அனைத்திலும் அவளை அவன் பாது காக்க வேண்டும்.

3. அவளுடைய மார்க்க விஷயங்களில் அவசியமானவற்றை அவளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு அவனால் இயலாவிட்டால் பள்ளிவாசல்கள், கல்விக்கூடங்கள் போன்ற இடங்களில் பெண்களுக்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற மார்க்க விளக்கக் கூட்டங்களில் அவள் கலந்து கொண்டு மார்க்கத்தைக் கற்பதற்கு அவன் அனுமதிக்க வேண்டும். ஆனால் அவ்விடங்கள் குழப்பத்தை விட்டும் பாதுகாப்பாக

இருப்பதோடு அதனால் அவனுக்கோ அவளுக்கோ இடையூறு இல்லாமல் இருக்க வேண்டும்.

4. அவளிடம் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: அவர்களுடன் நல்ல முறையில் வாழ்க்கை நடத்துங்கள். (4:119)

நல்ல முறையில் வாழ்க்கை நடத்துதல் என்பதில் தாம்பத்தியத்தில் அவளுக்குரிய உரிமையைக் குறைக்காதிருப்பது, திட்டுதல், இழிவாகக் கருதுதல் அல்லது இழிவுபடுத்துதல் மூலம் அவளுக்கு துன்பம் தராமல் இருப்பதும் அடங்கும். இன்னும் அவள் தனது உறவினர்களை சந்தித்து வருவதால் குழப்பம் ஏற்படுமென அவன் பயப்படாதபோது அவளைத் தடுக்காமல் இருப்பதும், அவளால் இயலாத வேலையைச் செய்யும்படி சொல்லாதிருப்பதும், சொல்லாலும், செயலாலும் அவளிடம் நல்ல முறையில் நடந்து கொள்வதும் நல்ல முறையில் வாழ்க்கை நடத்துவது என்பதில் அடங்கும். ஏனெனில் "தன் மனைவியிடம் சிறந்தவரே உங்களில் சிறந்தவர். நான் உங்களில் என் மனைவியிடம் சிறந்தவனாக இருக்கிறேன்" என நபி(ஸல்) கூறினார்கள். (திர்மிதி-3895)

## பர்தா அணிதல்

குடும்பம் சிதைந்து, சின்னா பின்னமாகி விடாமல் பாதுகாப்பதற்கு இஸ்லாம் அக்கறை கொண்டுள்ளது. இதனால் அதைச் சுற்றி ஒழுக்கங்கள், பண்பாடுகள் எனும் உறுதிவாய்ந்த வேலியை எழுப்பியுள்ளது.

காரணம் மனிதர்கள் நிம்மதியாகவும் சமுதாயம் தூய்மையாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக! அச்சமுதாயத்தில் இச்சைகள் தூண்டப்பட முடியாது. காம உணர்வுகள் கிளறப்பட முடியாது. இஸ்லாம் குழப்பத்தின் பால் இட்டுச் செல்லக் கூடியவற்றைத் தடுப்பதற்கான தடைகளையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே இஸ்லாம் ஆண், பெண் இருபாலாரும் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கட்டளை யிட்டுள்ளது.

இவ்வாறே ஹிஜாப்- பர்தா அணிவதையும் அல்லாஹ் பெண்களுக்கு கடமையாக்கியுள்ளான். இது அவர் களுக்குக் கண்ணியம் அளிப்பதற்காகவும், இழிவி லிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காகவும், தீயவர்கள் மற்றும் கெட்ட எண்ணம் கொண்டவர்களின் சில்மிஷங் களை விட்டும் அவர்களைத் தூரப்படுத்துவதற்காகவும், கண்ணியத்தின் மதிப்பை அறியாதவர்களிடமிருந்து அவர்களைக் காப்பதற்காகவும், அழகையும் அலங்காரங் களையும் வெளிக்காட்டிக் கொண்டு திரிவதனால் ஏற்படக்கூடிய குழப்பத்தின் வாசலை அடைப்பதற்காக வும், பெண்ணுக்கு கண்ணியம், பெருமை எனும் வேலியை எழுப்புவதற்காகமே இவ்வாறு கடமையாக்கியுள்ளான்.

இஸ்லாம் ஹிஜாபைக் கடமையாக்கியதன் மூலம் பெண்களின் கண்ணியமான வாழ்க்கைக்குப் பொறுப் பேற்க விரும்புகின்றது. எவ்வாறெனில் ஒரு பெண் வயது ஏற ஏற அவளது அழகை சிறிது இழக்கிறாள். அதே

நேரம் அவளின் கணவன் வீதிக்குச் செல்லும் போது வாலிபப் பருவத்திலுள்ள இளம் பெண்களை நல்ல அழகும் இளமையும் கொண்டவர்களாகக் காண்கிறான். பிறகு அவன் தன் மனைவிடம் வரும்போது ஒப்பு நோக்க ஆரம்பித்து விடுகிறான். இதனால் குடும்பத்தில் குழப்பம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

## பலதாரமணம்

மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே பலதார மணம் தோன்றியிருக்கிறது. முன் சென்ற மார்க்கங் களிலும் சமுதாயங்களிலும் இது இருக்கவே செய்தது. யூதர்கள், கிறிஸ்தவர்கள், சீனர்கள், இந்தியர்கள் என பல சமுதாயங்களிலும் பலதாரமணம் இருந்து வந்தி ருக்கிறது. ஆனாலும் இதற்கு ஒரு வரம்பு இல்லாமல் இருந்தது. ஒரு மனிதன் தனது விருப்பப்படி எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்து வந்தான். அதனால் அந்தப் பெண்கள் பாதிக்கப்பட்டு வந்தனர். அனால் இஸ்லாம் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த இந்த அநீதத்தைத் துடைந்தெறிந்தது. நான்கு பெண் களுக்கு மேல் யாரும் மணமுடிக்கக் கூடாது என்று வரம்பு விதித்தது.

இஸ்லாம் பலதாரமணத்தை அனுமதித்த அதே நேரத்தில் அதற்கு நிபந்தனையையும் விதித்தது. மனைவியருக்கு மத்தியில் நீதமுடன் நடந்து கொள்வது தான் அது. இந்த நிபந்தனைக்குப் பங்கம் விளை

விப்பதை கடுமையாக எச்சரிப்பதோடு அதற்கு கடுமை யான தண்டனையும் கொடுத்திருக்கிறது.

ஒருவன் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்வதற்கு பல அவசியங்கள்-தேவைகள் உள்ளன. உதாரணமாக முதல் மனைவி குழந்தை பெற்றுக் கொள்ள முடியாதவளாக ஆகிவிடலாம். அல்லது அவள் நோயாளியாக அல்லது வேறு ஏதேனும் குறையுள்ள வளாக ஆகிவிடலாம். இந்த நிலையில் இத்தகைய பெண்ணை கணவன் விவாகரத்து செய்வது சிறந்ததா? அல்லது அவளுடன் இன்னொருத்தியை மணப்பது சிறந்ததா?

அதுபோல பலதாரமணத்தில் சமுதாயத்துக்கு நன்மையும் உள்ளது. உதாரணமாக போர்கள், போராட்டங்கள் போன்றவற்றின் விளைவாக ஆண் வர்கம் பெருமளவு அழிந்து பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து விடுகின்றன. உதாரணமாக உலகப் போர் 25 மில்லியன் விதவைகளை ஐரோப்பாவில் விட்டுச் சென்றது. இந்த நிலையில் இத்தகைய பெண்கள் கணவனில்லாமல் விதவைகளாகவே இருப்பது தான் நியாயமா? அல்லது அவர்கள் இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்படுவது நியாயமா? 1945- ல் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜெர்மனில் பெண்கள் ஒரு போராட்டம் நடத்தினர். அதில், வேசித் தொழில் செய்வதை விட்டும் ஜெர்மானியப் பெண்களைப் பாது காப்பதற்காக பலதாரமணத்தை அனுமதிக்க வகை

செய்யும் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

## இஸ்லாமிய மார்க்கத்தில் இணைதல்

இஸ்லாமிய மார்க்கத்தின் மகத்துவத்தையும் அல்லாஹ்விடம் வெற்றி பெறுவதற்கு ஒரே வழி இஸ்லாம் தான் என்பதையும், இஸ்லாத்தில் இணைவது ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும், சொர்க்கம் செல்வதற்கும் நரகிலிருந்து தப்பிப்பதற்கும் இஸ்லாத்தைத் தழுவுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் நீங்கள் அறிந்து கொண்ட பிறகு இஸ்லாத்தைத் தழுவுவது எப்படி என்பதை விசாரிக்க வேண்டும்.

அதற்குப் பதில் இதுதான்: நீங்கள் இஸ்லாத்தில் சேர விரும்பினால், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதையும் முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதையும் நம்ப வேண்டும். இதனை உங்கள் நாவால் மொழியவும் வேண்டும். அதன் பிறகு தொழுகை போன்ற இஸ்லாமியக் கடமைகளைக் கற்றுக்கொள்ளத் தொடங்க வேண்டும். மேலும் அதனை உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப் படுத்த வேண்டும். இது சம்பந்தமாகத் தெளிவாக விளக்கக்கூடிய நூல்கள் ஏராளம் உள்ளன.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | எதற்காக நாம் படைக்கப்பட்டுள்ளோம்? | 5 |
| 2. | மனித வரலாறு | 7 |
| 3. | முஹம்மது நபி (ஸல்) | 12 |
| 4. | நபிகள் நாயகத்தின் நற்குணங்கள் | 21 |
| 5. | நபிகள் நாயகத்தின் அற்புதங்கள் | 24 |
| 6. | இஸ்லாத்தின் அடிப்படைகள் | 27 |
| 7. | இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் | 36 |
| 8. | இஸ்லாத்தின் தனிச்சிறப்புகள் | 39 |
| 9. | இஸ்லாத்தின் கட்டளைகள் | 50 |
| 10. | இஸ்லாத்தின் விலக்கல்கள் | 53 |
| 11. | மரணம் | 57 |
| 12. | மண்ணறை | 60 |
| 13. | இறுதி நாள் ஏற்படுதல் | 63 |
| 14. | நரகமும் அதன் வேதனையும் | 67 |
| 15. | சொர்க்கம் | 70 |
| 16. | இஸ்லாத்தில் பெண்கள் நிலை | 72 |
| 17. | பெண்களுக்குரிய பொதுவான உரிமைகள் | 77 |
| 18. | கணவன் மீது மனைவிக்குரிய உரிமைகள் | 80 |
| 19. | பர்தா அணிதல் | 82 |
| 20. | பலதாரமணம் | 84 |
| 21. | இஸ்லாத்தில் இணைதல் | 86 |